Reg. No. M. 1482.

ஸமரஸபோதினி.

The "Samarasabodhini"-A Tamil Weekly

Published in Tanjore, devoted to Politics, Education, Industry, Agriculture & Village improvement. etc.,

"தெரிந்த வினத்தோடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும் பொருள் யாதொன்றுமில்."

"எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணியராகப் பெறின்."

இ. சூரியநாராயண ஐயர் பி. ஏ., பி. எல்., பத்திராதிபர். E. Suryanarayana Aiyar B. A., B. L., Editor.

புத்தகம் 1. ரௌத்ரி௵ ஆவணி௴ ௰௭௳ புதன்கிழமை 1st September 1920. தஞ்சாவூர். பிரதி 12.

ஸமரஸ போதினி.

சந்தா விவரம்:—

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய விடங்களுக்கு	ரூ. 5—0—0
ஆறுமாதங்களுக்கு	ரூ. 3—0—0
பினங்கு, சிங்கப்பூர், முதலிய விடங்களுக்கு	ரூ. 7—0—0
ஆறுமாதங்களுக்கு	ரூ. 4—0—0
தனிப் பிரதி விலை	ரூ. 0—2—0

விளம்பர விகிதம்:—

பக்தி 1க்கு மாதம் 1க்கு	ரூ. 20—0—0
4 insertions per month per column	Rs. 20—0—0

3 மாதங்களுக்குக் குறையாமல் விளம்பரம் ஒப்பந்தம் செய்து கொள்பவர்களிடம் மிகவும் குறைந்த விகிதம் வாங்கப்படும்.

Kerosine Gas Stoves.

கியாஸ் அடுப்புகள்.

இதன் உபயோகம் அவசியமென்பது ஜனங்கள் அறிந்த விஷயம். தனி சாமான்களும் கிடைக்கும். கியாட்லாக் இனும்.

கோரனெஸ்ட்வ் நே. 5. ரூ. **14-0-0.**

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.

"The Young India."

A high class English weekly edited by Mahatma Ghandi. Only Rupees five per year. Oh! Sons & Daughters of Ind! Subscribe by thousands. In helping it you help yourselves.

The Manager, **Young India.**
Ahmedabad.

நாணயமும் நயமுமான

இடம்

ஒரு தடவை பரீக்ஷை செய்து பாருங்கள்.

ஓரியண்டல் வேர்ஹவுஸ் தஞ்சாவூர்

பட்டு அங்கவஸ்திரங்கள்.

பிரதிதினமும் தோய்க்கக் கூடியதும் நெடுநாள் உழைக்கக்கூடியதும் மிக அழுத்தமுமானது, மூந்தாணே குஞ்சம் கட்டின பட்டு அங்கவஸ்திரங்கள். வெண்மை, சந்தனகலர், கோல்டு கலர், மேகவர்ணம், பச்சை, நீலம், ஆகாயம், சிவப்பு, ரோஸ், முதலான பல கலர்களில் கிடைக்கும். இவைகள் அங்கவஸ்திரங்களாகவும், டர்பனாகவும், உபயோகித்துக் கொள்ளலாம். விலை சரஸம்.

சாதா சேலைகள்.

காப்பிகலர் கோக்கோ கலர், மக்கலர், காங்கு கலர்களில் ஒம்ருல் சேலைகள், பூனமுந்தி சேலைகள், பிரதிதினமும் தோய்த்து உடுக்கக் கூடியது. நெடுநாள் உழைக்கக் கூடியது. கெட்டி சாயமுள்ளது.

ஜமக்காளங்கள்.

சர்கூட் ஜம்க்காளங்கள் இங்கிலீஷ் பாட்டரன் கண்களை கவறக்கூடியது. மிக அழுத்தமானது.

பிடிக்காத தினுசுகள் வாபீஸ் பெற்றுக்கொண்டு வேறு தினுசுகள் அனுப்பிக் கொடுக்கப்படும். ஆகவே நேரில் பார்த்து வாங்க வில்லையென்ற எண்ணம் வேண்டாம்.

"வைசிய மித்திரன்."

இது காரைக்குடியினின்றும் வாரந்தோறும் அருமையான விஷயங்களுடன் ராயல்ஸைஸில் வெளிவரும் ஒரு வாராந்தத் தமிழ்ப் பத்திரிகையாகும். இது வியாபார விருத்திக் குரிய விஷயங்கள், கைத்தொழிற் குறிப்பு, விவசாய நுட்பம், விநோதக் குறிப்பு, அந்நிய வர்த்தமானம், பொது வர்த்தமானம், இராஜாங்க சமாச்சாரம், ஆகிய இவ்விஷயங்களுடன் வெளி வருகிறது. இந்திய மக்களுக்குப் "புதிய ஊக்கமும், செல்வப்பெருக்கம் வளருமாறு, பற்பல ஆராய்ச்சி வியாசங்கள், ராஜதந்திர நுட்பங்கள்" இவற்றை வெகு அழகாக எடுத்துப் போதித்து வருகின்ற இப்பத்திரிகையானது ஒவ்வொரு தமிழராலும் படிக்கத்தக்கதெனப் பல பத்திரிகைகளாலும் புகழப்படுகின்றது. இந்தியாவுக்கு வருட சந்தா ரூபாய் 5-0-0 (ரூபாய் ஐந்தே) வெளி நாடுகளுக்கு ரூபாய் 6-0-0.

மானேஜர்,
"வைசிய மித்திரன்" காரைக்குடி.

சர்வஜன மித்திரன்.

வாரம் இருமுறை புதன் சனிக்கிழமைகளில் வெளிவரும்.

நீர்வளம் நிலவள மலிந்த பினங்கின் கண் வந்துலாவும் நமது இந்திய வாசிகளின் முன்னேற்றத்தையும் கல்வியபிவிருத்தியையும் உன்னதி [illegible]ன்றி அவர்கள் பாஷாபிமானம் ஜனாபிமானம் மதாபிமானமும் பூண்டு சமூக வாழ்வில் நற்பெயரெய்தவும் அரசாங்க வர்க்கத்தினர் பால் விசுவாசம் படைத்தொழுகவும் உலகின் கண் ஆங்காங்கு நடைபெறும் சமாச்சாரங்களை எளிதிலுணரவும் வேதம், வைதீகம், வேதாந்தம், சித்தாந்தம் சாஸ்திர ஞானங்களையும் எனைய நாட்டின் சம்பவங்களையும் அங்கத்தினர் [illegible] வெளியுலாவ மகுடத்தில் [illegible] நாமம்புனைந்த தமிழ் பத்திரிகை அச்சிடப்பட்டு வருகிறது. இப்பத்திரிகையை யாவரும் ஆதரிப்பார்களாக.

சந்தா விபரம்.

உள்ளூர் சந்தா.		வெளியூர் சந்தா.	
வருஷம் 1-க்கு	$10 00	வருஷம் 1-க்கு	$15 00
6-மாதத்திற்கு	5 50	6-மாதத்திற்கு	8 00
3-மாதத்திற்கு	3 00	3-மாதத்திற்கு	4 50
1-மாதத்திற்கு	1 00	1-மாதத்திற்கு	1 50
தனிப்பிரதி 15-காசு		தனிப்பிரதி 18-காசு	

கு. அ அசன் முகைய்யதீன்,
மானேஜர், சர்வஜன மித்திரன்,
97. பினங் ஸ்திரீட், பினங்கு.

கனவான்களின்

உயர்ந்த லீவர் வாட்சுகள்,

இந்த கெடியாரத்தின் பின்புறமுள்ள மூடியின் பேரில் வெகு அழகாய் சித்திரவேலை செய்யப்பட்டிருக்கிறது. நல்ல உறுதியுள்ள சாமான்களால் நீடித்து உழைக்கக் கூடியனவாய் தயாரிக்கப்பட்டவை. ரூ. 4-8-0 ரேடியம் 8 மூலை நிஸ்ட்லெட் வாட்சு விலை ரூபா 7-0-0, ரேடியம் ரவுண்டு வாட்சு விலை ரூபா 6-0-0, ரேடியம் இல்லாத சாதா வாட்சு விலை ரூபா 5-0-0.

தைரியலக்ஷ்மி & கம்பெனி,
தபாற்பெட்டி 265, மதராஸ்.

சகோதரிகளுக்கு ஒரு வேண்டுகோள்.

சென்ற மாதம் 21ந் தேதி மாலை அன்னபூரணு வித்யாசாலை அபிவிருத்தியை முன்னிட்டும் அதற்குப் பணம் சேகரிப்பதைப்பற்றி ஆலோசிக்கவும் தஞ்சை நகர் ஸ்திரீகளின் பொதுக்கூட்டமொன்று மேற்படி பாடசாலையில் கூடியது. அப்போது பெரிய பிரமுகர்களின் வீட்டு ஸ்திரீகள் விஜயம் செய்திருந்தார்கள். அவர்களில் மிஸஸ் சுப்பராவ் (சப்ஜட்ஜின் மனைவி) மிஸஸ் சாம்பமூர்த்திராவ், மிஸஸ் கிருஷ்ணசாமி நாயக் அவருடைய குமாரிகள், மிஸஸ் சுந்தர சுவாமிகள், மிஸஸ் இ. சூரியநாராயண ஐயர், பாடசாலை உபாத்தினிகள் முதலியவர்கள் விஜயம் செய்திருந்தார்கள். பாடசாலைச்சிறுமிகள் பாடிய பிறகு,

மிஸஸ் இ. சூரியநாராயண ஐயர்

அன்னபூரணு வித்யா சாலைக்கு எல்லோரும் பணம் கொடுத்து உதவி செய்யவேண்டுமென்றும் பெண்களின் கல்வியபிவிருத்தியில் அக்கரையுள்ளவர்கள் பணம் கொடுத்து உதவி செய்யாவிடில் பாடசாலை அபிவிருத்தி யடைதல் தடைப்படுமென்றும் கூறிவிட்டு, இப்பாடசாலையையொட்டி ஒரு ஸ்திரீ வாசக சாலையை ஏற்படுத்த வேண்டுமென்றும், மகாத்மா காந்தியடிகளின் சுதேசிய விரதத்தை எல்லா ஸ்திரீகளும் அனுஷ்டிக்க வேண்டுமென்றும் வற்புறுத்தினர். அப்போது அவர் பேசியவைகளின் சுருக்கத்தை நாம் ஈண்டு வெளியிடுகிறோம்:—

இத்தஞ்சைமா நகரில் பல மாதங்களாக அன்னபூரணு பெண் பாடசாலையொன்று நடத்தப்பட்டு வருவதை நம் சகோதரிகள் அறிவார்களென்று நினைக்கிறேன். இப்பாடசாலை போதிய பணமின்றித் தவிக்கிறது. எல்லாச் செல்வங்களைக் காட்டிலும் கல்விச் செல்வம் விசேஷமானதென்று நம் பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள். நாம் அதை அனுபவத்திலும் பார்க்கிறோம். இவ்வரிய கல்விச் செல்வத்தைச் சிறுமிகளுக்கு அளிக்கும்பொருட்டு மேற்கண்ட பாடசாலை ஏற்பட்டிருக்கிறது. பாடசாலை முன்னேற்றம் பெற ஸ்திரீ புருஷர்களெல்லோரும் தங்களால் இயன்றவளவு உதவி செய்வது அவசியமாகும்.

இத்துடன் இன்னுமொருயோசனைசொல்ல விரும்புகிறேன். ஸ்திரீ தர்மத்தை நிலைநிறுத்தவேண்டுமானுல், பெண்கள் சத்தியம், ஞானம், தர்மம், தயை, சாந்தம், கற்பு ஆகிய இவ்வரிய குணங்களைக் கைக்கொள்ள வேண்டும். பள்ளிக்கூடக் கல்வியினுல் ஸ்திரீகள் தாங்கள் கோரிய உத்தமகுணங்களை அடையமாட்டார்கள்; அவ்வப்போது தூண்டுகோலாகவிருக்கிற நல்ல புஸ்தகங்களைப் படிக்கவேண்டும். நல்ல புஸ்தகங்களை வாங்கிச் சேகரிக்கவேண்டும். ஒழிந்த நேரங்களில் எல்லோரும் படிக்கவேண்டி மேற்கண்ட பாடசாலையையொட்டி ஒரு வாசக சாலை ஏற்படுத்துவது அவசியமாகும். இந்தியஸ்திரீகளின் முன்னேற்றத்திற்காக உழைத்துச் சமீபத்தில் இறந்துபோன திலகர் பிரானின் பெயரால் அந்த வாசக சாலை ஏற்படுத்துவது விசேஷமாகும். இந்த யோசனையை நம் சகோதர மணிகள் கவனிப்பார்களாக.

பொதுவாக எல்லா ஸ்திரீகளுக்கும் இன்னொரு விஷயம் சொல்லவேண்டியிருக்கிறது. இந்திய தேசம் க்ஷீண தசையடைந்து வருந்துவதால் அது முன்னேற்றம் பெறுவதற்கு ஒரு மகான் ஓர் உபாயத்தைக்கண்டு பிடித்திருக்கிறார். அவர் யார்? மகாத்மாகாந்தி. இப்பெரியார், ராமராவணேச்வர யுத்தத்தில் மனச்சோர்வடைந்திருந்த ஸ்ரீராமபிரானுக்கு அகஸ்திய மகரிஷி ஆதித்திய ஹிருதயத்தை உபதேசித்துத் தைரியமூட்டியது போல துணிப்பஞ்சத்தில் அடிபட்டிருக்கும் நம்மவர்களுக்கு ஓர் அரிய உபதேசத்தைச் செய்திருக்கிறார். அதாவது சுதேசிய உபதேசம் அல்லது சுதேசிய விரதமென்னலாம்; நம் நாட்டில் விளையும் பருத்தியைக்கொண்டு ஒவ்வொரு குடும்ப ஸ்திரீயும் சுமார் ஐந்து ரூபா பெறுமானமுள்ள நூல் நூற்கும் ராட்டினத்தில் குடும்பக் காரியங்கள் போக ஒழிந்த காலங்களில் நூல் நூற்கலாம். அதைக்கொண்டு ஒரு குடும்பத்திற்கு வேண்டிய துணிகளை நெய்து தரும்படி ஏற்பாடு செய்துகொள்ளலாம். இவ்வாறு செய்வது கௌரவக்குறைவல்ல;. பம்பாயிலுள்ள உயர் குலச் சீமாட்டிகளும், சுதேச சமஸ்தானங்களின் ராணிகளும் இவ்வேலைகளைச் செய்து மற்ற ஸ்திரீகளுக்கு வழி காட்டுகிறார்கள். இக்காரியத்திற்குச் சகோதரர்களுடைய உதவி யிருந்தால், இது வெகு சீக்கிரம் எல்லா வீட்டு ஸ்திரீகளாலும் அனுஷ்டிக்கப்படுமென்பது நிச்சயம். சகோதர சகோதரிகளே! மகாத்மா காந்தி சொல்லியதைக் கேட்டு நடவுங்கள். நீங்கள் நல்ல பதவி யடைவீர்கள்.

பின்னர், ஸ்ரீமதி சாவித்ரி பாய் ஸ்திரீகளுக்கு உயர்தரக் கல்வி வேண்டுமென்றும் அவர்கள் மகாபாரதம் இராமாயணம் முதலிய கிரந்தங்களின் உண்மைகளைப் படிக்கவேண்டுமென்றும், ஸ்திரீகளுக்குக் கல்வியே பிரதானமென்றும், இதுவே எல்லா ஆபரணங்களைக் காட்டிலும் சிறந்த ஆபரணமென்றும் சொல்லி முடித்தார்.

கடைசியாக விஜயம் செய்திருந்த எல்லோருக்கும் சந்தன தாம்பூலம் வழங்கப்பட்ட பிறகு கூட்டம் கலைந்தது.

—

இனம்! இனம்!! இனம்!!!

ஸமரஸபோதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரமே

(செப்டம்பர் மாதம் 30-ந் தேதிக்குள் ஆர்டர் செய்வோருக்கு.)



இங்கிலாந்தில் பெயரெடுத்த "வாட்டர்மென்" பவுன்டன்பேனுவையொத்த ஒருபுதுமாதிரி "வெல்லஸ்லி" என்ற பெயருடன் ஒரு பேனு இப்பொழுதுதான் எமக்குவந்தது. இதன் விலையையும், அமைப்பையும் கவனித்தால் இதற்கு கொடுக்கும் விலை மிகவும் சொற்பமென்றே சொல்லலாம். இது 14 காரட்டு பொன்நிப்புடனும், மிக அழகாயும் ஷெ பேனுவின் மூடிகளில் ஸ்குரு வைத்திருப்பதாயும், ஷெ பேனுவை பாக்கெட்டில் எந்த மாதிரி போட்டாலும் இங்கிகொட்டாவண்ணம் செய்யப்பட்டிருக்கின்றது. இது இங்கிலாந்தில் எமக்கென்றே செய்யப்பட்டவை. எமக்கு இந்த "வெல்லஸ்லி" பேனுக்கள்பிரதிதினமும் நூற்றுக்கணக்காய்செலவாகி வருகிறபடியால் தேவையுள்ளோர்சீக்கிரம்நமக்கு ஆர்டர்செய்துபெற்றுக் கொள்ளவும்.

"வெல்லஸ்லி" பேனுக்களில் பல மாதிரிகள்.

வெல்வஸ்லி சேப்டி நெ. 11 இது வாட்டர்மென்ஸ் சேப்டி பவுண்டன் பேனுவை போலவேயிருக்கும் விலை ... ... ரூ. 4 8.
ஷெ ,, 12 ... ... ,, 5 0.
ஷெ ,, 206 சேப்டி செல்ப் பில்லர் இந்த பேனுவிற்கு இங்கிபோட வேண்டுமென்றுல் ஷெ பேனுவை இங்கிபுட்டியினுள் காட்டி பேனுவின்மேலுள்ள ஸ்பிரிங்கை தூக்கினுல் பேனுவானது இங்கியை தானுகவே உட்கொள்ளும். ,, 5 8.

நமது விலாசம்:— "ஸமரஸபோதினி" சந்தாதாரருக்கு தபாற்கூலி இனும்.

ஸ்டெஷனரி சப்ளை கம்பெனி, மதராஸ்,

சவரன் படைமருந்து.

எப்பேர்ப்பட்ட தீராத மேகப்படைகளையும், மேகரணங்களையும், வண்ணுன் சிரங்கு பொறுக்க முடியாத நமைச்சல்களையும் 24 மணி நேரத்தில் கண்டிப்பாய் குணப்படுத்தும். குணமில்லையென்றுல் பணம் வாபீஸ் செய்யப்படும். புட்டி 1.க்கு அணு 12. 3 புட்டிக்கு சார்ஜ் இனும்.

சவரன் அண்டு கம்பேனி,
10, கச்சாலீஸ்வரர் அக்ரஹாரம், சென்னை.

"Be just and fear not,
Let all the ends thou aimest at,
Be thy Country's, thy God's&Truth's"

ரௌத்ரி ஹூ ஆவணி மீ ௰௭ புதன்கிழமை.

1st SEPTEMBER 1920.

கிராமப் பஞ்சாயத்து மசோதா.

1.

அநேக நூற்றுண்டுகளுக்குமுன் நமது இந்தியாவிலுள்ள கிராமங்களெல்லாம் செழிப்பாகவும் சுபிட்சமாகவுமிருந்தனவென்று நமது புராதன கிரந்தங்கள் கூறுவதோடு மேல்நாட்டுநிபுணர்களுங்கூறியுள்ளார். பிரிட்டிஷாரின் ஆட்சிக்குட்ப்பட்ட இந்திய கிராமங்கள் பத்தொன்பதாம் நூற்றுண்டு ஆரம்ப முதல்க்ஷீன தசை அடைந்து கொண்டுவருவதுடன் கிராமங்களில் வெகு நாளாகவிருந்த வழக்கங்களும் கிராம நிர்வாக முறைகளும் அடியோடுமாறிவிட்டன. ஒருசிறுராஜாங்கம் போலிருந்து சுயேச்சையுடன் ஆட்சி செய்யப்பட்டு வந்தகிராமங்கள் இப்போது சின்னு பின்னமாகப்போய்விட்டன. நமது தேசத்தில் பூரண சுய ஆட்சி ஏற்படப்போகும் தறுவாயில் நாம் கிராம சீர்திருத்தத்தைக் கவனிக்காமலிருப்பது பிசகாகும். ஆகையால், இந்தியாவின் சுய ஆட்சிக்கு அடிப்படையான கிராமத்தைச் சீர்படுத்தி அதன் நிர்வாகம் சரிவர நடக்குமாறு செய்வது ஒவ்வோர் இந்தியரின்கடமையாகுமென்று நாம் சொல்லவேண்டுவதில்லை.

பிரிட்டிஷ் இந்தியாவில் சுமார் 25 கோடி ஜனங்களில் சுமார் 23 கோடி ஜனங்கள் கிராமங்களில் தங்கள் வாழ்நாளைக் கழித்துவருகிறுர்கள். புராதனமான நகரங்களில் வசிப்போர் மிகச் சிலரேதானிருக்கின்றனர். இங்கிலாந்து ஸ்காட்லாந்து முதலியவிடங்களில் ஐந்தில் நாலுபங்கு ஜனங்கள் பட்டணங்களில் வசிக்கிறுர்கள். இந்த மேல் நாட்டு வழக்கத்தை அனுசரித்தே நமது கவர்ன்மெண்டார் கிராமங்களைக் கவனியாமல் நகர பரிபாலன விஷயத்தில் கவலை செலுத்தலானுர்கள்; பல வழிகளில் பட்டணங்களை அலங்கரிப்பதும் அங்குவாசத்திற்குத்தகுதியுள்ள ஏற்பாடுகளைச் செய்வதும், பெரிய ரோடுகளை அமைப்பதும், இவைபோன்ற அநேக காரியங்களைச் செய்வதுமாயிருந்து வந்தார்கள், இவைகளைக்கண்டு கிராமங்களில் வசிப்பதைக்காட்டிலும் பட்டணங்களில் வந்து குடியிருப்பது சௌகரியமென்று நினைத்துக் கிராமவாசிகள் பட்டணங்களுக்குக் குடிபியேறுகிறுர்கள். இதன் பயனுக கிராமங்கள் செல்வாக்கற்றுப்போயினவென்று நாம் சொல்லவும் வேண்டுமோ? கிராமக் கட்டுப்பாடும் குலைந்துபோயிற்று. பட்டணங்களில் ஜன நெருக்கமும் அதிகமாயிற்று. ஜன நெருக்கடியால் வியாதிகள் புதிது புதிதாக உண்டாயின. இவையெல்லாம் அறிந்த கவர்ன்மெண்டார் இப்பொழுதுதான் கண்விழித்துக்கொண்டிருக்கிறுர்களென்று கூறவேண்டும். கிராமங்களை முன்போல் பரிபாலிக்கவேண்டுமென்றும் கிராமங்களில் பஞ்சாயத்து சபைகளை ஏற்படுத்தவேண்டுமென்றும் தீர்மானித்திருக்கின்றனர்.

இந்தியாவில் சுய ஆட்சி ஏற்படும் பொழுது ஜனங்கள் தங்களுடைய பொறுப்பை உணர்ந்து தாங்களே பல காரியங்களை நிர்வகிக்கவேண்டிவரும் என்பதை அறிந்த கவர்ன்மெண்டார் கிராமபஞ்சாயத்துமசோதா ஒன்றைச் சென்னைச் சட்டசபையின் ஆலோசனைக்குக்கொண்டு வந்திருக்கிறுர். இந்த நல்ல காரியத்தை வெகு காலத்திற்கு முன்னரே கவர்ன்மெண்டார் செய்திருக்கவேண்டும். இப்பொழுதாகிலும் அவ்வாறு செய்யத்துணிந்ததைப்பற்றி நாம் சந்தோஷமடைகிறோம்.

கிராமபஞ்சாயத்து மசோதாவில் அடங்கியிருக்கும் விஷயங்களைச் சற்று ஆராய்வோம். முக்கியமாக ரிவினியூ கிராமங்களில் பஞ்சாயத்து சபைகளை ஏற்படுத்தவேண்டுமென்றும், அந்தக்கிராம சம்பந்தமான விஷயங்களைமட்டில் கவனிப்பதற்காகக் கிராமவாசிகளால் தெரிந்தெடுக்கப்பட்ட ஐந்து முதற்கொண்டு பதினைந்து மெம்பர்களடங்கிய பஞ்சாயத்து சபையிருக்கவேண்டுமென்றும். பஞ்சாயத்தை ஏற்படுத்தும் விஷயத்திலும் பஞ்சாயத்தார்களின் தொகை இன்னதென்று குறித்து நிர்ணயம் பண்ணும் அம்சத்திலும் கவர்னமெண்டாரின் உத்திரவின் பேரில்தான் நடக்கவேண்டுமென்றும், பஞ்சாயத்தின் தலைமை ஸ்தானத்தை வகிப்பவர் "வோட்" மூலமாய் தெரிந்தெடுக்கப்பட்டவராயிருக்கவேண்டுமென்றும், கிராம முன்சீப் பஞ்சாயத்தின் அங்கத்தினராகவும் சேர்மனுகவும் இருக்கக்கூடாதென்றும், மசோதாவில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அன்றியும் கவர்ன்மெண்ட் உத்தரவினுல் ஏற்படுத்தப்படும் பஞ்சாயத்து சபையானது கிராம சுகாதாரம், ரோடுகள், புறம்போக்கு நிலங்கள், கிராமத்திலுள்ள வாய்க்கால்கள், கிராமப் பாதுகாப்பு முதலிய காரியங்களைக் கவனித்து நிர்வகிக்கும் பாத்தியம் பெறுமென்றும், பஞ்சாயத்தார்கள் கிராம நிர்வாகத்திற்காகப் "பஞ்சாயத்து நிதி" என்னும் ஒரு நிதியை ஏற்படுத்திக் கொள்ளலாமென்றும், "பஞ்சாயத்து" ஸெஸ் என்னும் வரியையும் விதித்து வசூலிக்கலாமென்றும், அம்மாதிரி வரி விதிப்பதற்கு ஆஜராயிருக்கும் பஞ்சாயத்தார்களில் மூன்றில் இரண்டு பங்கு மெம்பர்கள் சம்மதித்தாலன்றி வரி விதிக்கக்கூடாதென்றும் வரி விதிப்பதற்கென்றே ஸ்பெஷலாக பஞ்சாயத்து சபையைக்கூட்டி யோசிக்கவேண்டுமென்றும், ஆங்காங்குப் பஞ்சாயத்து சபைகள் ஏற்படுத்த "பஞ்சாயத்து ரிஜிஸ்திரார்" என்னும் உத்தியோகஸ்தர் நியமிக்கப்படுவார்களென்றும்மசோதாவில் காணப்படுகின்றன.

மசோதாவின் குண தோஷங்களைக் குறித்து எழுது முன்னர் பண்டைக் காலத்தில் நமது தேசத்தில் அனுஷ்டானத்திலிருந்த கிராமப் பஞ்சாயத்துகளைப்பற்றியும் மசோதாவில் காணப்படும் பிறவற்றையும் நாம் அடுத்த பத்திரிகையில் எழுதுவோம்.

இடை நிஷஸ விளக்கு

பரிதாபம் !

எலிமெண்டரி பாடசாலை உபாத்தியாயர்களின் பரிதாப நிலையை நாம் என்னென்று எழுதுவது? தங்களுடைய கூக்குரலைக்காது கொடுத்துக் கேட்போருமில்லை; கேட்டுப்பரிகாரம் செய்வோருமில்லை யென்றல்லவோ? எலிமெண்டரி பாடசாலை உபாத்தியாயர்கள் கதறுகிறுர்கள். ஏழைகளைக் கதறவிடுவது அரசாங்கத்தாருக்கு அழகல்லவென்று நாம் நினைக்கிறோம். அகவிலை ஏற்பட்டநாள் முதற்கொண்டு அவர்கள் தங்கள் கஷ்டங்களை அரசாங்கத்தாருக்கும் ஆங்காங்கிருக்கிறஸ்தலஸ்தாபனங்களிலுள்ள அதிகாரிகளுக்கும்தெரிவித்துப்பரிகாரம் செய்யவேண்டுமென்று மன்றாடி வர ஒருவரேனும் முன்வந்து அவர்களுக்குத் தைரியம் கூறுதது நமக்கு வருத்தத்தையுண்டு பண்ணுகிறது. சம்பளக்கமிட்டியார் சிபார்சு செய்தபடியேனும் அவர்களுக்குச் சம்பள உயர்வு கொடுக்கப் படாமல் தாமதம் செய்யப்பட்டு வருவதற்குக் காரணமென்னவென்று நாம் கேட்கிறோம்.

இரக்கம் வேண்டும்

சமீபத்தில் சேலம்முனிஸிபல் எலிமெண்டரி உபாத்தியாயர்கள் சங்கத்தார் லார்ட் வில்லிங்டனுக்குஒருமகஜர் அனுப்பி, அதில் இப்போது தாங்கள் பெற்றுவரும் சம்பளம் 25 வருஷங்களுக்கு முன்பு திட்டம் செய்யப்பட்டதென்றும் இக்கடுங்காலத்தில் அதே சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு மனைவி மக்களுடன் குடும்பம் செய்வது அதிக சிரமமாயிருக்கிறதென்றும், தங்களுக்கு (மனைவிமக்கள் உள்பட நால்வருக்கு) மாதம் ஐம்பது ரூபாய் பிடிக்கிறதென்றும், இனி தங்களால் பசிதாள முடியாதென்றும் கவர்ன்மெண்டார் உடனே தாமதம் செய்யாமல் 499 நெம்பர் கவர்ன்மெண்ட் உத்தரவில் கண்டபடியேனும் தற்காலிகமாக மாதம் பத்து ரூபா அலவன்ஸ்கொடுத்து வரவேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கிறுர்கள். இவர்களுடைய கோரிக்கை நியாயமானபடியால்

இன்னும் காலதாமதம் செய்யாமல் லார்ட் வில்லிங்டன் கவர்ன்மெண்டார் தக்கது செய்வது அவசியமென்பதை நாம் வற்புறுத்துகிறோம். இந்தியாவின் எதிர்காலக்கல்வி நிலைக்கு அடிப்படையாக விருக்கிற எலிமெண்டரி பாடசாலை உபாத்தியாயர்கள் மீது இரக்கம் காட்டி அவர்களுடைய நிலையைக்கூடிய சீக்கிரத்தில் சீர்படுத்துவது அவசியமாகும்.

போதாது

ஆனியில் ஒருநாள் ஐப்பசியில் ஒருநாள் எலிமெண்டரி பாடசாலை உபாத்தியாயர்கள் கூட்டம் கூட்டித் தங்களுடைய கோரிக்கைகளைத தெரிவித்துக்கொண்டால் போதுமா? அது போதாதென்றே நாம் அபிப்பிராயப்படுகிறோம். நியாயக் கிளர்ச்சியொன்றே உபாத்தியாயர்கள் விரும்பியதைக் கொடுக்கும். நியாயக்கிளர்ச்சி செய்தால் கவர்ன்மெண்டாரேனும் அல்லது மேலதிகாரிகளேனும் கோபம் கொள்கிறார்களா? இல்லையே. இங்ஙனமிருக்க, எலிமெண்டரி பாடசாலை உபாத்யாயர்கள் ஒருமுகமாக வேலை செய்து, எந்தவழிகள் மூலமாகத் தங்களுடைய கோரிக்கைகளை அறிவித்து நிறைவேற்றிக் கொள்ளலாமோ அந்தந்த வழிகளில் முயற்சி என்செய்யவில்லை? முதன்முதலாக அவர்கள் செய்யவேண்டியது தங்களுக்குள்ளிருக்கும் மத்திய சங்கத்தைப் பலப்படுத்திக் கொள்ளவேண்டும். பிறகுஆங்காங்குக் கிளைச்சபைகளை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். அவர்கள் தங்களுடைய கோரிக்கைகள் நிறைவேறும் வரையில் அக்கோரிக்கைகளைப் பற்றி விவகரிப்பதற்காக அடிக்கடிக் கூட்டம் கூடிப்பொது ஜனங்களின் ஆதரவைப் பெற்றுப் பெரிய கிளர்ச்சி செய்யவேண்டும். இக்காலத்தில் —இல்லை எக்காலத்திலும்— வாயுள்ளபிள்ளைகள் தான் பிழைப்பார்கள். இவ்வுண்மையை ஒவ்வோர் எலிமெண்டரி பாடசாலை உபாத்யாயரும் உணரவேண்டும்.

அரியவாக்கு

இந்தச் சந்தர்ப்பத்தில் பிள்ளைகளின் பெற்றோர்களுக்கு ஒரு விஷயம் அறிவிக்கிறோம். அரைவயிறும் கால்வயிறும் சாப்பிட்டுப் பல கஷ்டங்களுக்கிடையில் வருந்திக்கொண்டிருக்கும் ஏழை உபாத்தியாயர்களுடைய போதனையால் இந்தியச் சிறுவர்கள் வருங்கால கவிச்வரர்களாகவும் வீரர்களாகவும் தேசபக்தர்களாகவும் எங்ஙனம் ஆவார்கள்? ஆதலால் உபாத்தியாயர்களின் நிலைமையைச் சீர்படுத்தி அமைப்பதற்குப் பெற்றோர்களும் பொறுப்பாளிகள் என்பதை உணரவேண்டுகிறோம். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டில் ஒரு சமயம் பிரக்யாதி பெற்றிருந்த லார்ட் ஹால்டேன் கல்விக்களஞ்சியமாகிய உபாத்தியாயர்களை வாடவிட்டுப் பட்டினிபோடுவது (அரைவயிறு கால்வயிறு சாப்பிட்டு வயிறு வளர்ப்பதைப் பார்த்திருப்போம்) கவர்ன்மெண்டிற்குப் பலக்குறைவென்றும் ஜெர்மெனியில் உபாத்தியாயர்களைப் போஷித்து (நல்ல சம்பளம் கொடுத்து) வருவது போல் இனி பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரும் தங்கள் நாட்டு உபாத்தியாயர்களைப்போஷித்து வரவேண்டுமென்றும், அப்போதுதான் உபாத்தியாயர்களுடைய கல்வியறிவு மாணவர்களுக்குத் தானாகவே உண்டாகுமென்றும் கூறியிருக்கிறார். இப்பெரியாருடைய அரியவாக்கைக் கவர்ன்மெண்டார் கவனிப்பரோ?

எதற்காக?

இந்தியாவுக்கு அடுத்த வைசிராயாக மிஸ்டர் மாண்டேகு வரமாட்டாரென்றும் ஒரு சமயம் லார்ட் பர்க்கன் ஹெட் என்பவர் வரலாமென்றும் லண்டனிலுள்ள சில பத்திரிகைகள் அறிவிக்கின்றன. இச்செய்தியைக் கேட்டவுடன் இந்தியர்களிடம் அனுதாபமுள்ள "மான்செஸ்டர்கார்டியன்" இந்தியாவுக்கு லார்ட் பர்க்கென் ஹெட் அடுத்த வைசிராயாக நியமிக்கப்படக்கூடாதென்று கண்டித்து எழுதுகிறது. இதை இந்தியர்களெல்லோரும் ஒருமனதாக ஒப்புக்கொள்வரென்பதில் சந்தேகமில்லை. லார்ட் பர்க்கென்ஹெட் என்பவர்யார்? என்று நம் நேயர்களில்சிலர் வினவலாம். இதற்குப்பதில் சவிஸ்தார எழுதத்தற்சமயம் நமது பத்திரிகையில் இடமில்லாமற் போனாலும், சூட்சமமாக இரண்டொரு அம்சங்களை இந்தியர்கள் கவனித்தால் போதுமானதாகும். இவர் லார்டு சபைமெம்பர்; இந்தியாவின் விளைபொருள்களை வியாபாரக் கொள்ளையிட்டு எது எக்கேடு கெட்டுப் போனாலும், இந்தியர்கள் இருந்தாலும் இறந்தாலும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமுதலாளிகள் செழித்துக்கொழுக்கவேண்டுமென்று பேராசை கொண்டவர்; பிரிட்டிஷ் நியாயம் தர்மம் இவைகள் கருபபு நிறத்தார்களுக்கு முக்கியமாக இந்தியர்களுக்கு கிடையாவென்ற கொள்கையுடையவர்; பஞ்சாபில் படுகொலைக்குத்தலைவனான டையர் என்பவன் செய்த செயல் நியாயமென்று லார்டு சபையில் வாதம் செய்தவர்; இத்தியாதி குணங்களுடைய பர்க்கென் ஹெட்பிரபு, இந்தியர்களைச் சுதந்தரமின்றிச் செய்து ஆயுத்ததால் அடக்கி ஆண்டு விடலாமென்று ஆசை கொண்டிருக்கிற வரும் முதலாளி கோஷ்டியைச் சேர்ந்தவருமான பர்க்கென் ஹெட் பிரபு, இந்தியாவுக்கு இராஜப்பிரதிநிதியாக அனுப்பப்படுவது எதற்காக? வென்று நாம் வினவுகிறோம். இராணுவபலத்தை இந்தியாவில் காட்டுவதற்காகவா? அல்லது இந்தியாவை மற்றொரு அயர்லாந்தாகச் செய்வதற்காகவா? பிறகு எதற்காக? பர்க்கென்ஹெட் பிரபு இந்தியாவுககு அனுப்பப்பட உத்தேசம்.

காலம் கெட்டு வருகிறது.

எந்தக் காரணத்தினாலோ காலம் கெட்டுவருகிறது. கலிகால அற்புதங்களும் கொடுமைகளும் நாளுக்கு நாள் அதி விசித்திரமாகவும் மனிதர்கள் பொறுக்கமுடியாதனவாகவும் நடைபெற்று வருகின்றன. கொடுமைகள் படிப்படியாக அதிகரிக்கின்றனவேயன்றிக் குறைந்தபாடில்லை. நம் பிரிட்டிஷ் ராஜாங்கத்தில் நியாயமும் தருமமும் ஜீவன்கள் மீது கருணையும் கூடிய வரையில் பிரகாசிக்குமென்று இந்தியர்கள் நம்பியிருந்தார்கள். அந்த நம்பிக்கை குறைந்து வருவதற்குச்சில பிரிட்டிஷ் அதிகாரிகள் இரக்கமற்ற காரியங்கள் செய்து வருவதை நாமென்னவென்று எழுதுவது? மத்திய மாகாணத்தில் ஸாகர் என்னும் நகரத்திற்குச் சமீபமாகவுள்ள ராடோனா என்னுமிடத்தில் வருஷம் ஆயிரக்கணக்கான பசுக்களைக் கொலை செய்வதற்கு ஒரு பசுக்கொலைச்சாலை கட்ட கவர்ன்மெண்டார் உதவிசெய்ய உத்தேசித்திருக்கிறார்களென்று ஒருசெய்தி கூறுகிறது. இதைக்கேட்ட இந்தியஸ்திரீபுருஷர்களெல்லோரும் நடுங்கிவிடுவார்களென்பது நிச்சயம். இஃதென்ன அக்கிரமம்? அநியாயம்? அதர்மம்? பசுக்களைக் காப்பாற்றவேண்டியது அரசாங்கத்தின் கடமையாயிருக்க, பிரிட்டிஷ் ராஜாங்கத்தில் எந்தக் காரணத்தை முன்னிட்டோ, பசு மாமிசபட்சிணிகளின் ஆகாரத்தை உத்தேசித்தோ, அல்லது தோல் வியாபார அபிவிருத்தியைக் கருதியோ, ஓரிடத்தில் பல ஆயிரக்கணக்கான பசுக்கள் கொலை செய்யப்படுவது இந்தியர்களால் முக்கியமாக இந்துக்களால் பொறுக்கமுடியாத காரியமென்றே நாம் கூறுகிறோம்.

சாத்விக இந்துக்களே!

எழுந்திருங்கள்! இந்தப் பெரிய அநீதியான காரியம் இந்தியாவில் நடைபெறக் கூடாதென்று ஆங்காங்குக் கூட்டம் கூடி கவர்ன்மெண்டாருக்கு உங்களுடைய தீர்மானத்தைத் தெரியப்படுத்துங்கள். விவசாயம் க்ஷீணதசையடைந்து வரும்போது, குழந்தை மரணங்கள் அதிகரித்து வரும் நாளில், நெய்பாலின்றி இந்தியர்கள்மெலினமடைந்து ஆண்மைத்தனத்தை இழந்து வரும் காலத்தில், அரசாங்கத்தார் ஆங்காங்குக் கோரட்சணசாலைகள் ஏற்படுத்தவேண்டியிருக்க, காமதேனுவாகக் கருதப்படுகிற பசுக்களைக் கொலை செய்ப உதவி செய்வது நீதியோவென? நாம் கேட்கிறோம். முஸ்லிம்களும் பசுவதை கூடாதென்று தீர்மானித்து, இந்தியாவில்பசுக்கள் ரட்சிக்கப்படவேண்டுமென்று கூறும் தறுவாயில் அரசாங்கத்தார் ஆயிரக்கணக்கான ரூபாய்களைச்செலவழித்துப் பசுக்கொலைசாலை கட்ட ஓர்ஐரோப்பிய கம்பெனிக்கு உதவி செய்வது அக்கிரமத்திலும் அக்கிரமாகும். இந்துக்களே! நீங்கள் உங்களுடைய அருவருப்பைக் கவர்ன்மெண்டாருக்குத் தெரியப்படுத்துங்கள்.

கண்டிப்பான செய்தி.

ஐரோப்பியர்கள் ஆசியா ஜனங்களின் உரிமைகளை இதுகாறும் காலால் மிதித்து வந்ததுபோல இனி மிதித்து வரமுடியாதென்று சாத்விக புருஷராகிய ரெவரெண்டு ஆன்ட்ரூஸ் ஐரோப்பியர்களும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரும் அறியும் வண்ணம் ஒரு கண்டிப்பான செய்தியை வெளியிட்டிருக்கிறார். கிழக்கு ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களுக்கு விரோதமாக அங்குள்ளவெள்

லார்ட் செம்ஸ் போர்டு வேடிக்கையாகப் பேசுகிறார்!

ஸ்ரீமான் சங்கிருதி எழுதுகிறார்.

இராஜப் பிரதிநிதி லார்ட் செம்ஸ் போர்டு வேடிக்கையாகவே பேசுகிறாரெனத் தெரிகிறது. ஒன்றும் அறியாதவர் போலவும் இந்தியா கவர்ன்மெண்டார் எதிர்பாராமல் ஏற்பட்டது போலவும் இந்தியாவில் சென்ற ஜூன் மாதம் இறக்குமதி அதிகமென்றும் ஏற்றுமதி குறைவென்றும் தமது சட்டசபைப் பிரசங்கத்தில் குறிப்பிட்டார். இதற்குக் காரணமென்ன? ஒரு குழந்தை தன் கையிலிருந்த விளையாட்டுப் பொம்மைகளைத் தரையில் தட்டி உடைத்துவிட்டு அவைகள் உடைந்து போன பிறகு பெற்றோர்களிடம் சென்று "என் பொம்மைகளை யாரோ உடைத்துவிட்டனர்" என்று அழுவதுபோல நமது லார்ட் செம்ஸ் போர்டு இந்தியாவிலிருந்து ஏற்றுமதி அதிகம் செய்யப்படாமலிருக்கும் முறைகளை கையாண்டு செய்து விட்டு இப்பொழுது ஏற்றுமதி குறைவாகவிருக்கிறதென்று பரிதபித்துக் குறிப்பிடுவதன் கருத்து இந்தியர்களுக்கு விளங்கவில்லை. இந்தியாவின் பண நிலையைச் சீர்படுத்திவைப்பதாக ஜனங்களுக்குச் சொல்லி லார்ட் செம்ஸ் போர்டும் இந்தியா மந்திரியும் நாணய மாற்றல் விஷயத்தில் கையாண்ட முறையே முற்றிலும் -தவறான முறையே- ஏற்றுமதி குறைந்து போனதற்குக் காரணமாகும். நாணய விசாரணை கமிட்டியில் இந்திய அங்கத்தினராயிருந்த மிஸ்டர் தாதிபா டலால் கவர்ன்மெண்டார் கைக்கொண்ட முறை இந்தியவின் வியாபாரத்திற்குப் பெரிய ஆபத்தை உண்டாக்கு மென்றும், ஏற்றுமதி குறைந்துவிடுமென்றும் எச்சரிக்கை செய்தனர். இவர்மாத்திரமல்ல. இந்தியாவிலுள்ள இந்திய வியாபாரம் பிரமுகர்களெல்லோரும் கவர்ன்மெண்ட் சென்ற வழியைக் கண்டித்து எச்சரிக்கை செய்தார்கள். கவர்ன்மெண்டார் இந்திய வியாபாரிகளின் அபிப்பிராயத்தையும் க்ஷேமத்தையும், எச்சரிக்கையையும் கவனிக்கவில்லை. கடைசியில் என்ன பயனுண்டாகியது? அந்நிய நாடுகளிலிருந்து இறக்குமதிப் பொருள்கள் ஏராளமாக வந்திறங்கின. இந்தியாவிலிந்து ஏற்றுமதிப் பொருள்கள் குறைந்துவிட்டன. வைசிராய் சொல்லியபிரகாரம் ஏற்றுமதியைக் காட்டிலும் மூன்று கோடி ரூபா மதிப்புள்ள இறக்குமதிப் பொருள்கள் அதிகமாக இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. இப்பொருள் களெல்லாம் இந்தியாவில் விற்கப்பட்டுப் பணமாக அந்நிய நாடுகளுக்குப் போய்விடுகிறது. இந்தியர்களின் வியாபார நிலை இவ்வாறிருந்தால் இந்தியர்கள் எங்ஙனம் வறுமையினின்றும் மீளுவது? அந்நிய நாட்டு வியாபாரிகள் இந்தியாவினின்று விளைந்த பொருள்களை வாங்கப் பணமின்றிப் போய்விட்டார்களென்று லார்ட் செம்ஸ் போர்டு அதை ஒரு காரணமாகச் சொல்லத் துணிகிறார். இக்காரணம் ஒரு நிமிஷப் பேச்சில் அடிபட்டுப் போகுமென்பதை லார்ட் செம்ஸ் போர்டு கவனியாததேனோ? இறக்குமதிப் பொருள்களை ஏராளமாக விருத்தி செய்து அவைகளை இந்தியாவிலும் பிற நாடுகளிலும் கொண்டுவந்திறக்கிக் கொள்ளை லாபம் அடித்துச் செல்லும் ஜப்பான் வியாபாரிகள் பணமின்றி யிருந்தார்களென்று சொல்லமுடியுமா? காரணம் லார்ட் செம்ஸ் போர்டு கவர்ன்மெண்ட் நாணயமாற்றல் விஷயத்தில் புகுத்திய பிற்போக்கான முறையேயாகுமென்று நிபுணர்கள் ஒப்புக்கொள்வார்கள். எப்படியோ இந்த முறையினால் இந்திய ஏற்றுமதி வியாபாரம் குன்றிவிட்டதென்னலாம்.

பருத்தியின் நிலை.

உதாரணமாக ஒரு விளை பொருளை மாத்திரம் எடுத்து அதன் ஏற்றுமதி இறக்குமதியைக் கவனிப்போம். சென்ற ஜூன்மாதத்தில் இதன் ஏற்றுமதி குறைவு; இறக்குமதி அதிகம். 120 லட்சம் ரூபா மதிப்புள்ள பருத்தி ஏற்றுமதி செய்யப்பட்டது. இறக்குமதி ஐந்து மடங்கு அதிகமாக அதாவது 616 லட்சம் ரூபாய் மதிப்புள்ள பருத்தி இறக்குமதி செய்யப்பட்டது. இதனால் பருத்தித் தொழிலின் நிலையை நாம் நன்கறியலாம். எப்போதும் ஒருவன் வாங்கிச் சாப்பிடுவது கஷ்டம். பிற நாடுகளிலிருந்து இறக்குமதிப் பொருள்களை எதிர்பார்த்து இந்தியர்கள் ஜீவிக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள். இந்த நிலை மாறுவதற்குக் கவர்ன்மெண்டார் நல்ல பரிகார முறைகளைக் கையாளவேண்டும். உதாரணமாக சுமார் 15 வருஷங்களுக்கு முன்பு ஜப்பானில் வருஷம் 12 லட்சம் பவுன் மதிப்புள்ள சாமான்கள் இறக்குமதிசெய்யப்பட்டன. நாளடைவில் ஜப்பான் கவர்ன்மெண்டார் நாட்டுத்தொழில்களை விருத்திசெய்து ஏழைகளுக்குஜீவனம்கொடுத்துவந்தார்கள். இம்முறையால் 1909 ம் வருஷத்தில் ஜப்பானில் 30 ஆயிரம் பவுன் மதிப்புள்ள சாமான்களே இறக்குமதி செய்யப்பட்டன வென்றால் ஜப்பானின் தொழில் முன்னேற்றத்தையும் வியாபார அபிவிருத்தியையும் நாமென்னென்பது? ஒரு தேசத்தின் ஏற்றுமதியைக்கொண்டே அந்தத் தேசம் செழிப்புடையதா? அல்லது வறுமையுடையதா? என்று பார்க்க முடியும். இறக்குமதி அதிகமாக அதிகமாக அந்தத் தேசம் ஏழைகள் வசிக்கும் தேசமென்று சிலராலும் சோம்பேறிகள் வசிக்குமென்று பலராலும் அழைக்கப்படுமென்று அஞ்சுகிறோம்.

ஊயர்களின் வார்த்தைகளை மதித்து லார்ட் மில்னர் சிலமுட்டாள் யோசனைகளை வெளியிட்டிருக்கிறார். இவருடைய யோசனைகள் அமுலுக்கு வந்தால், இந்தியர்களின் கதி அதோகதியாகத்தான் முடியுமென்பது நிச்சயம். இந்தியர்கள் எவ்வளவு காலம் தான் குடியேற்ற நாட்டு வெள்ளையர்களின் கொடுமைகளைப் பொறுத்திருக்க முடியும்? எதற்கும் ஓர் எல்லையுண்டல்லவா? இந்தியர்களை அப்புறப்படுத்துவதையும், அவர்களை ஒழுக்கஹீனர்களென்று மானக்கேடான காரியங்கள் புரிவதையும், கடுமையான நிர்ப்பந்தங்களால் அவர்களை ஒதுக்கி ஒருபக்கமாக வசிக்கும்படி கட்டாயப்படுத்தி அடிமைகளாக நடத்துவதையும் இந்தியா கவர்ன்மெண்டார் பார்த்திருக்கின்றனர்! இந்தியர்கள், மிஸ்டர் ஆன்ட்ரூஸ்கூறுவது போல் தைரியமாக எழுந்து நின்று தங்களுடைய உரிமைகளைப் பெறப் போராட வேண்டும். போராட்டத்தில் சளைத்துப்போய்விடுதல் கூடாது.

வோட்டர்களுக்கு ஒரு வேண்டுகோள்.

புது சீர்திருத்த சட்டப்பிரகாரம் வைசிராய் சட்ட சபையைச் சேர்ந்த கௌன்ஸில் ஆப் ஸ்டேடுக்கு (அரசாங்க சபைக்கு) நான்கு மெம்பர்கள் நமது இராஜதானியிலிருந்து தெரிந்தெடுக்கப்படுவார்கள். இந்நால்வரில் இப்போது இராஜப் பிரதிநிதி சட்ட சபை மெம்பரான கனம். கே. வி. அரங்கசாமி ஐயங்கார் மேற்கண்ட அரசாங்க சபைக்கு ஓர் அபேட்சகராக நிற்கிறார். இவர் வோட்டர்களுக்கு எழுதியனுப்பியுள்ள விண்ணப்பப் பத்திரத்தை நாம் மற்றோரிடத்தில் வெளியிட்டிருக்கிறோம். நேயர்கள் இதைக் கவனிப்பார்களாக.

சட்டசபை எலக்ஷன்

கனம் கே. வி. அரங்கசாமி ஐயங்காரின் விக்ஞாபனம்

நண்பர்களே!

அடுத்த நவம்பர்மாதம், வைஸ்ராய் சட்டசபையைச் சேர்ந்த கௌன்ஸில் ஆப்ஸ்டேட்டுக்கு 4. பேர்கள் நமது ராஜதானியிலிருந்து தெரிந்தெடுக்கப் படுவார்கள் அவர்களுள் நான் ஒரு அபேக்ஷகராக நிற்க வேணுமென்று எனது மித்திரர்களும், தேசசேவை செய்துவரும் தலைவர்களும், கேட்டுக்கொண்டதின்பேரில் அப்படிச்செய்ய ஒப்புக்கொண்டிருக்கிறேன். அப்படிக்குத் தீர்மானம் செய்தபிறகு அனேகம்பேர்கள் அதிக உத்ஸாகத்துடன் எனக்கு வோட்டுக்கொடுப்பதாக எழுதியிருக்கிறார்கள். காங்கிரஸ் கம்மிட்டியாரும், என்னைத் தெரிந்தெடுத்திருக்கிறார்கள்.

அநேக வருஷங்களாக, பொது ஜனவிஷயங்களில் ஊக்கம் உள்ளதோடு, சென்ற 4 வருஷங்களாக கவர்னர் ஜனரல் சட்டசபையில் மெம்பராக இருந்ததில் தேசக்ஷேமத்தை யேக்கருதி இப்போது ஏற்பட்டிருக்கும் ஜாதி, மதம், கக்ஷி முதலியவைகளில்சேர்ந்துசின்னவிஷயங்களில் பிரவேசிக்காமல் சர்வஜன சுகத்துக்கு உழைத்துவருகிறேன். அனேக அக்கிரமங்கள் சட்டசபையில் செய்ததைக் கடுமையாக ஆக்ஷேபித்ததில், உத்தியோகஸ்தர்கள் மனஸ்தாபத்தைக் கவனியாமல் ஜனங்கள் பிரீதியையும் நம்பிக்கையையுமே புருஷார்த்தமாகக் கருதி உழைத்துவந்திருக்கிறேன்.

ஜமீன்தார்கள் பிரதிநிதியாக இருந்தபோதிலும், இதர்கள் காரியத்திலும் விட்டுக்கொடுக்கவில்லை. 19 பேர்கள் சேர்ந்து மனுசெய்து கொண்டு, பிறகு ராஜ்யவத்திருத்தம் செய்யவேண்டியதில் பிரயாஸை எடுத்துக் கொண்ட சிலரில் நான் ஒருவனென்று எல்லாக்கக்ஷியாரும் ஒப்புக் கொள்ளக்கூடியது. இனி நிலவரிஜாஸ்தி செய்யாமலிருக்கும்படிக்கும் பெரிய குடும்பங்கள் பாகத்தாலும் விக்கிரயத்தாலும் மெலிந்து போகாமலிருக்கும்படிக்கும், ஸ்வவித்தை விருத்தியிலும், பாஷைப்படி மாகாணங்களேற் படுத்துவதிலும் சுதந்தரம் சுயராஜ்யம் கிடைப்பதற்கும், அச்சுச்சட்டம், ரௌலட் சட்டம் முதலியவைகளை ரத்து செய்வதற்கும், விடாமுயற்சிசெய்ய சங்கல்பித்திருக்கிறேன்.

இதுவரையில் எனக்கு ஏற்பட்ட கடமையை சரிவரப் பூர்த்திசெய்து ஜனங்களுக்குத் திருப்தி செய்ய பாக்கியம் ஏற்பட்டதில் ஒரு பெருமைதான். இனியும் தேசசேவையும், ஜனப்பிரீதியும் சம்பாதித்துக்கொள்ளவிருப்ப முள்ளவனாக இருக்கிறேன்.

இப்போது கவுன்ஸில் ஆப்ஸ்டேட்டுக்கு (Council of State) தங்கள் வோட்டை எனக்குக்கொடுத்து என்னை கௌன்ஸிலுக்குமெம்பர் ஆகும்படி கௌரவித்தால் தேசத்துக்காகவேண்டியகாரியங்களுக்குஒருசலுகைஎனக்கு ஏற்படுவதுடன் தேசசேவை செய்வோர்களுக்கு ஜனங்கள் நன்றிமறவார்களென்கிற தைரியமும உதவாகமும் ஏற்படும்.

சாந்திகூடம், ஸிம்லா, 26—8—20. } தங்கள் அரங்கஸ்வாமி அய்யங்கார்.

உலக அரசியல் நிலைமை.

தீர்க்கதரிசி எழுதுகிறார்,

சுதந்தர சூரியன்.

நண்பர்காள்! இந்த வாரம் அந்நியநாடுகளினின்று வெளியான செய்திகளில் முக்கியமானது எகிப்து ஜனங்கள் சுயாதீன ஆட்சி பெற்றுவிட்டார்களென்ற செய்தியாகும். எகிப்தியர்களுக்கு நல்ல காலம் பிறந்தது. கஷ்டங்களும் ஒழிந்தன.

சுமார் 35 வருஷங்களாகப் பிரிட்டிஷாரின் கட்டு திட்டங்களுக்குட்பட்டிருந்த எகிப்து அல்லது ஈஜிபட் தேசத்தில் சுதந்தர சூரியன் உதயமாகிவிட்டான். ஆனால் அந்தச் சூரியனுக்கு ஒச்சமிருக்கிறதென்று சிலர் சொல்லுவர். இருந்தாலும் பாதகமில்லை. அந்த ஒச்சத்தை ஒரு நிமிஷப்பொழுதில் நீக்கிவிடலாம். எகிப்தியர்களுக்கு என் மனமார்ந்த சந்தோஷத்தைத் தெரிவிக்கிறேன். ; எகிப்தியர்களின் சுயாதீனத்தை, சுயநிர்ணயத்தை, சுதந்தரத்தைப் பிரிட்டிஷார் ஒப்புக்கொண்டுவிட்டனர். இனி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியச் செருக்கு ஈஜிப்டில் ஒழிந்துவிட்டதென்னலாம். அங்குப் பிரிட்டிஷாரின் அடக்குமுறை ஓடிப்போய் ஒளிந்துகொண்டுவிட்டதென்னலாம். ஈஜிப்து மற்றொரு அயர்லாந்தாக மாறாதது பிரிட்டிஷாரின் பாக்கிய வசமென்னலாம். கடைசியாகப் பிரிட்டிஷாருக்குச் சுதந்தர புத்திவந்ததென்றும் கூறலாம். பிரிட்டிஷாரின் தம்முரட்டு ஏகாதிபத்தியக் கொள்கைகளையும், அரச தந்திரிகளின் மாயத் தந்திரங்களையும் அடியோடு மாற்றினது யார்? அவர்கள் எகிப்து தேசீயக் கட்சியினர்களேயாகும். இவர்களிடமிருந்து இந்தியர்கள் ஒரு பாடம் கற்றுக்கொள்ளவேண்டும். அதாவது இடைவிடாமல், முன் வைத்த காலைப் பின் வாங்காமல், என்ன ஆபத்துக்கள் நேரிட்டாலும், கவர்ன்மெண்டார் அடக்குமுறைப் பிரயோகம் செய்து அதட்டி மிரட்டிப் பயமுறுத்தினாலும் தேசீய லட்சியத்தைவிடாமல், நாளுக்கு ஒரு கொள்கையை வழிபற்றாமல், சமயத்திற்கும் கூட்டத்திற்கும், முகதாட்சிண்யத்திற்கும் தக்கபடி நடவாமல் நியாயக் கிளர்ச்சி செய்யவேண்டுமென்பதாகும். நியாயக் கிளர்ச்சி ஜெயம் பெற்றுவிட்டது. "நியாயக் கிளர்ச்சிக்கு ஜேய்" என்று, நீங்கள் பரிகாசம் செய்யாமலிருந்தால், நான் சந்தோஷத்துடன் கூக்குரலிடுவேன். நியாய கிளர்ச்சியொன்றே நல்ல பயன் தரும். கைகண்ட பலனை எகிப்தியர்கள் பெற்றுவிட்டார்கள்.

இனி அராபியர்களும் அடைவார்கள்; கடைசியாக இந்தியர்களும் சுயாதீனம் பெறுவார்கள். வெகு நாள் தாமதிக்கவேண்டாம். காலம் கிட்டிவிட்டது. பிரிட்டிஷ் கவர்ன்மெண்டிற்கு நல்ல எண்ணம் உதித்துவிட்டது. இந்தியர்களே விழித்துக்கொள்ளுங்கள்! எகிப்து சுயாதீனம் பெறப்போவதைப்பார்த்து ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகள் உறுமுகின்றன, பனங்காட்டுநரி சலசலப்புக்கு அஞ்சாது என்பதை இந்த ஆங்கிலோ இந்தியப்பத்திரிகைகள் இனியாவது அறிந்துகொள்ளட்டும். இன்னும் கூடிய சீக்கிரத்தில் எகிப்துக்கும் பிரிட்டிஷ்கவர்ன்மெண்டுக்கும்ஸ்திரமான சிநேக உடன்படிக்கை ஏற்பட்டுவிடும். உடன்படிக்கை விதிகள் தயாரிக்கப்பட்டுவருகின்றன. எகிப்து தேசீயக்கட்சியினர்கள் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரோடு கடிதப்போக்கு வரவுசெய்து கொண்டிருக்கிறார்கள். எகிப்தின் நிர்வாகத்தை எகிப்தியர்கள் ஏற்றுக்கொண்டு வெளிநாடுகளில் தங்களுடைய தூதர்களை அனுப்பி அந்நியநாட்டுக் காரியங்களைக் கவனித்துவரலாமென்று ஏற்பட்டிருக்கிறது. பிரிட்டிஷாரின் சம்பந்தம் உள்நாட்டு நிர்வாகத்தில் நீக்கப்பட்டுவிடும். ஆனால்எகிப்தியர்கள்பிரிட்டிஷாருக்குவிரோதமாக அந்நிய நாட்டினர்களோடுஒப்பந்தங்கள செய்துகொள்ளக்கூடாதாம். சூயஸ்கால்வாயில் சமீபத்தில் பிரிட்டிஷாரின் சேனையொன்று வைக்கப்படும். வேண்டாமென்றுசொல்லப்படுகிற பிரிட்டிஷ்உத்தியோகஸ்தர்கள் சம்பளம்கொடுத்து வீட்டுக்கு அனுப்பப்படலாமென்று எகிப்தியர்கள், அதிகாரம் பெறுவார்கள். ஏறக்குறைய இந்த முறைகளில் எகிப்தியர்கள் ஒப்புக்கொள்கிறார்களென்று தெரிந்தால், ஸ்திரமான உடன்படிக்கையொன்று சீக்கிரம ஏற்பட்டுவிடலாமென்று தெரிகிறது. இதன் சம்பந்தமான விஷயங்களைச் சமயம் வாய்த்தபோது எழுதுவேன். இது காறும் சுதந்தரத்திற்குக் கிளர்ச்சிசெய்த எகிப்தியர்கள் பிரிட்டிஷாரால் அராஜகர்களென்று கருதப்பட்டுவந்தார்கள். இனி அவர்கள் எகிப்த்தேசத்தை நிலைநிறுத்தியவர்களென்றுஅழைக்கப்படுவோர்கள். இது சரித்திர அனுபவம்.

கோர்ட் விளம்பரங்கள்

தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட் கோர்ட்டு.

O. P. No. 105 / 20.

சவுரிராஜ முதலியார். } மனுதார்.

சுப்பிரமணிய முதலியார். } ரேஸ்பாண்டேண்ட்.

ஷை நெ. ல் இறந்த புத்திர கொண்டாஞ்சேரி சாமிநாத முதலியார் பெண் மைனர் 7 வயதுள்ளவைரக் கண்ணு அம்மாளுக்கும் ஷை மைனருக்குச் சொந்தமான சொத்துக்களுக்கும்தான் கார்டியனாக நியமிக்கப்பட வேணுமென்று ஷை மனுதாரரால் தஞ்சாவூர் டிஸ்ரிக்கட்டு கோர்ட்டில் ஷை நெ. ல் மனு கொடுத்து ஷை மனுவானது வருகிற 10—9—20 ல் சறங்கி போடப்பட்டிருக்கிறது.

தஞ்சாவூர். 30—8—20. } K. P. Subramania Iyer. B.A. B.L. ப்ளீடர்.

தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட் கோர்ட்டு.

1920-ம் வருஷத்திய O. P. No. 167.

மைனர் மோகன்ராம்விஷயமாய்:—ராஜண்ணு அம்மணி } மனுதார்.

V. Ry. ஜீவாஜி கோவிந்தராவ் மோய்தேராவ் சாயப்பு. V. Ry. ராமச்சந்திர சூர்வேராவ் சாயப்பு. } ரேஸ்பாண்டேண்டுகள்.

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்ன வென்றால்:—

தஞ்சாவூரில் இறந்த சௌ. பாப்பண்ணு ராஜா அம்மணி மைனர் குமாரனான மோகன்ராம் என்பவனுக்கு ஷை மனுதார் ராஜண்ணு அம்மணி ஷை மைனரின் சரீரத்துக்கும் சொத்துக்களுக்கும் தன்னைக்கார்டியனாகநியமிக்க வேணுமென்றுஷை கோர்ட்டில் மனு கொடுத்து அது விஷயமாய் 14-9-20 தேதிக்கு சாங்கி தேதி கெடு குறிக்கப்பட்டிருக்கிறது. ஷை மனு விஷயமாய் ஆக்ஷேபனையுள்ளவர்கள் ஷை தேதியில் ஷை கோர்ட்டில் பகல் 10 மணிக்கு ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்,

தஞ்சாவூர். 30—8—20 } R. V. Rama Iyer. Vakil for Pleader.

ஜில்லா செய்தி.

ஸ்ரீமான் ஜி. ஆர் சுப்பராயர் தஞ்சாவூர் அடிஷனல சப் ஜட்ஜாக நியமனம்.

* *

கோயமுத்தூர் கவர்ன்மெண்டு டிரயினிங் ஸ்கூல் முதல் அஸிஸ்டெண்டு மிஸ்டர் பி. எஸ் சுந்தரமய்யர் தஞ்சை கவர்ன்மெண்டு உயர்தர எலிமெண்டரி ஸ்கூல் முதல் அஸிஸ்டெண்டாக நியமனம்.

* *

தஞ்சாவூர் ஜில்லா எலிமெண்டரி ஸ்கூல் உபாத்தியாயர்கள் சங்கத்தின் ஆதரவில் 1920ௗ செப்டம்பர் ௴ 5௳ மாலை 2 மணிக்குத் திருவாரூர், விஜயபுரம் மகா-ா-ா-ஸ்ரீ ராமனுதய்யரவர்கள் ஸ்கூலில் நம் ஜில்லாவிலுள்ள எல்லா உபாத்திமை சங்கக் காரியதரிசிகளின் மீட்டிங்கு கூடும்.

* *

சென்ற மாதம் 29 ந் தேதி மாலை 6 மணிக்கு மணிககூண்டு மைதானத்தில் தஞ்சை வரி செலுத்தும் சங்கத்தாரின் கூட்டமொன்று கூடியது. தேசபக்தரான ஸ்ரீமான் டி. எ. இராமச்சந்திர செட்டியார் அக்கிராசனம் வகித்தார். ஸ்ரீமான் கந்தசாமி பிள்ளை நகர பரிபாலனம் என்னும் விஷயத்தைச் சவிஸ்தாரமாக எல்லோருடைய மனதில் படும்படி பிரசங்கித்தார். ஸ்ரீமான் ஆறுமுகம் பிள்ளையும் பேசினர். முடிவில் அக்கிராசனர் முனிஸிபல் விஷயங்களைப்பற்றிப் பேசி வரி செலுத்துவோர்கள் தங்களுடைய உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்று கூறினர். முடிவில் காரியதரிசி மிஸ்டர் வேங்கடராமய்யர் அடுத்த ஞாயிற்றுக்கிழமை ஒரு கூட்டம் கூடுமென்று அறிவித்தார்.

* *

இராஜகிரி வாசியான முகமத் கன்னிஎன்பவரும் இன்னும் சிலரும் சூலமங்கலத்தைச் சேர்ந்த ஒரு பஞ்சமனைத் கொலைசெய்து விட்டதாக வழக்குக் கொண்டுவரப்பட்டு பாபநாசம் சப்மேஜிஸ்டரேட் கோர்ட்டில் விசாரணை நடந்து வருகிறது.

* *

பாபநாசம் விக்டோரியா ஹைஸ்கூலைச் சேர்ந்த வாலிபச் சங்கத்தின் ஆதரவில் தஞ்சை "சமரஸபோதினி"யின் ஆசிரியரான ஸ்ரீயான் இ. சூரியநாராயண ஐயர் அவர்கள் 'தாய்நாட்டுக்கு வாலிபர்கள் செய்யவேண்டிய கடமை" என்னும் விஷயமாக ஒரு விசேஷப் பிரசங்கம் செய்தார். அவ்வமயம் தலைமை உபாத்தியாயரான ஸ்ரீமான் சுப்பிரமணிய ஐயர் அக்கிராசனம் வகித்தார். சாரணச் சிறுவர்கள் கோர்ட் விசாரணை நடத்திக்காண்பித்தது சிலாகிக்கத்தக்கது. ஸ்ரீமான்கள் ஸ்ரீநிவாசய்யங்காரும் சாரணச் சிறுவர்களின் தலைவர் இராமபத்திர ஐய்யங்காரும் எடுத்துக்கொண்ட முயற்சிகள் கொண்டாடத் தக்கன.

* *

தஞ்சையினின்றும் விசேஷ காங்கரஸுக்கு ஸ்ரீமான்கள் திவான் மாதவராவ் இராமசந்திரசெட்டியார் ஜனுப் கமால் சாகிப் சுவாமி அற்புதானந்தர் முதலியவர்கள்புறப்பட்டுப்போயிருக்கிறார்கள். தஞ்சை ஜில்லாவினின்றும் முக்கியமாக இராஜகிரி, பண்டாரவாடை, ஐயம்பேட்டை, கண்டியூர், திருவாதி, கும்பகோணம் முதலியவிடங்களிலிருந்தும் பல கனவான்கள் சென்றிருக்கிறார்கள்.

* *

பூண்டியில் பிரபல விவாகம்.

ராவ் பகதூர் அப்பாசாமி வாண்டையார் இரண்டாவது குமாரர் ஸ்ரீமான் கிருஷ்ணசுவாமி வாண்டையார் அவர்களுக்கும் மதகரம் ஜமீன்தார் குமாரத்தி சௌ. பொன்னம்மாளுக்கும் இம்மாதம் 2 ந் தேதி வியாழக்கிழமை விவாகம் பூண்டியில் நடைபெறும்.

பெரியாரின் ஜீவிய சரிதம்.

திலகர் பெருமான்

திலகர் பிரானும் சூரத்து காங்கிரஸூம்

25ந்தேதி "ஸமரஸ போதினி" யின்
(2ம் பக்கத் தொடர்ச்சி.)

"தன்னிடத்து நீராடியவற்கு நற்கதி கொடுப்பது மாத்திரமேயன்றித்தன்னைமனதினால் நினைத்தாலும், தனது ஒப்பற்ற நாமத்தை நாவாரத் தோத்திரஞ் செய்தாலும், முக்தியளிக்கவல்லதான" தப்தியாறு பாய்கின்ற சூரத்துமா நகரத்தில் சிங்காரத் தோப்பினடுவில் காங்கிரஸ் பந்தல் வெகு விநோதமா யமைக்கப்பட்டிருந்தது. டிசம்பர்மாதம் இருபத்தாறுந்தினம் பகல் இரண்டரைமணிக்குக் காங்கிரஸ் சபை கூடியது. சுமார் 1300 பிரதிநிதிகள் பிரசந்நராயிருந்தனர். அவர்களுள் அறுநூற்றுக்கு மேற்பட்ட தொகையுளோர் தேசியவாதிகள். உபசரணைத் தலைவர் பிரசங்கம் முடிந்தவுடன், திவான்பகதூர் அம்பலாலென்பவர் ராஷ்பிஹாரி கோஸ் அக்கிராசனம் வகிக்குமாறு பிரேரேபித்தார். இத்தீர்மானத்தை யாமோதிக்கும் பொருட்டுப்பானர்ஜியெழுந்தவுடன் பெருத்த ஆரவாரமுண்டாயது. மதனபுரியில் போலீஸ் அதிகாரிகளைப் பானர்ஜி மகாநாட்டிற்கு வரவழைத்தாரெனும் வதந்தியை நம்பிப்பிரதிநிதிகளிலநேகர் அவர்பேசுங்கால் கூச்சலிட்டனர். மால்வி பன்முறை வேண்டியும் சத்தமடங்கவில்லை. காங்கிரஸூம் அன்று நடைபெறாது மறுநாள் மாற்றப்பட்டது.

காங்கிரஸை விட்டு வெளிப்போந்ததும் திலகர்பெருமான் தமது கட்சியினரைக்கூப்பிட்டு, எவ்விதத்திலும் அவர்கள் அமைதியுடனிருக்க வேண்டுமெனவும் சற்றேனும் பேசாமல் வோட்டையுபயோகப் படுத்த வேண்டுமெனவும் உபதேசித்தார். இரவில் சூனிலால், கஜ்ஜார் முதலியோர் சமதானஞ் செய்ய முயன்றும் மிதவாதிகள் இணங்கவில்லை.

இரண்டாம் நாள் ராஷ்பிஹாரி கோஸ் ஊர்வலமாய் காங்கிரஸை நோக்கிவருங்கால், திலகர் பெருமான் பின்வருமாறு ஒரு துண்டுக்காகிதத்திலெழுதிஉபசரணைத்தலைவரான மால்விக்கனுப்பினர்:—

"ஐயா"

அக்கிராசனரை நியமனஞ் செய்யுந் தீர்மானம் ஆமோதிக்கப் பட்டவுடன் நான் பிரதிநிதிகளுக்குச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அத்தீர்மானத்தை நிறைவேற்றாது காங்கிரஸைக் கொஞ்ச நேரந் தள்ளிவைக்குமாறுகேட்டுக்கொள்ளப்போகிறேன். உடனே பதிலளிக்கவும்.

இப்படிக்கு அன்புள்ள
(ஒப்பம்) பாலகங்காதர திலகர்.

இத்துண்டுக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டதாய் மால்வியே பிறகு ஒப்புக் கொண்டிருக்கிறார்.

காங்கிரஸ் பகல் ஒரு மணிக்குத் தொடங்கியது. சுரேந்திர நாத்பானர்ஜி தலைவர் நியமனத்தை யாமோதித்தார். திலகர்பிரான் தாமனுப்பிய கடிதத்திற்குப் பதில் கூறுமாறு கெல்கரைக் கொண்டு மால்விக்கு ஞாபகப்படுத்தியும் எவ்விதபதிலும் வந்து சேரவில்லை. பானர்ஜி பேசி முடிந்தவுடன் திலகரெழுந்து மேடையை நோக்கிச்சென்றார். வழியில் யாரோவொரு மூர்க்கன் அவரைத் தடுக்க முயன்றான். அவனைய லட்சியஞ்செய்து திலகர் பெருமான் தமது திருத்தப் பிரேரேபணையை யாதரித்துப் பேச ஆரம்பித்தவுடன் சபையோர் பலத்தகர கோஷஞ்செய்தனர். ராஷ்விஹாரிகோஸ் திலகரைப் பேசலாகாதென்று சொல்லத் திலகர் பிரான் அவரின்னும் அக்கிராசனராய்த் தெரிந்தெடுக்கப்படவில்லை யெனப் பதிலுரைத்தார். மால்வியும் ராஷ்பிஹாரியும் பன்முறைத் திலகரையுட்காருமாறு வற்புறுத்தினார்கள். உலகமெலாங் கலக்குறினும் உறுதிநிலை கலங்காத திலகமுனி "நான்பேச வேண்டும். இல்லையேல் எனது சரீரத்தை யெவரேனும் பலவந்தத்தால் அப்புறப்படுத்தினாலோழிய நான் இவ்விடம் விட்டகலமாட்டேன்" என்று மிகுந்த சாந்தத்துடனும் தீர்மானத்துடனும் கூறினார். இவ்வார்த்தைகளைக் கேட்ட மிதவாதிகளிலநேகர் திலகரையடித்துத் தொந்திரவு செய்யவெண்ணத்துடன் கழிகளைக் கையிலேந்தி மேடைக்கு வந்தார்கள். ஒரு சண்டாளன் திலகரைத் துன்பப்படுத்த நினைத்து அவரது சரீரத்தைத் தொட்டான். கோகலே நடுக்கமுற்றோடி வந்து அத்தகைய பாவியைக் கண்டித்துத் திலகர் மேலேவரும் மிருகசக்தியுபயோகப் படுத்தாமலிருக்கும்படித் தமது நீண்டகைகளினால் அணைக்கலானார். திலகர்பெருமானோ சற்றும் பயமின்றிச் சிறித்த முகத்துடனும் பொறுமை பாலிந்த கண்களுடனும் அசைவற்று நின்று கொண்டிருந்தார். தேசீயவாதிகளெல்லோரும் திலகரைச் சத்துருக்கள் தொந்திரவு செய்யாது காப்பாற்றச்சமீபத்தில் வந்தார்கள். இதற்குள் பந்தலில் மிதவாதிகளும் தேசீயக் கட்சியினரும் கைகலக்க வாரம்பித்துஒருவர் மேலொருவர் நாற்காலிகளையும் மேசைகளையும் எறிந்தார்கள். திடீரென்று செருப்பொன்று சுழன்று வந்து மேச்தாவின் தோளில் விழுந்துப் பானர்ஜியின்முகத்திலடித்தது. ஊர்க்காவலர்கள் உள்நுழைந்து யாவரையும் வெளியே போகுமாறு உத்தரவிட்டனர். திலகர் பெருமானது சீடர்கள் தங்கள் குருவை யெவ்வித அபாயமுமின்றி யழைத்துச் சென்றார்கள். காங்கிரஸ் சரித்திரத்தில் தீராதஅவமானத்தைத்தரத்தக்க இச்சம்பவம்கோர்ந்ததில் இருதிறத்தினருக்கும் ஆற்றொணாத் துயரமுண்டாயிற்று. ஆனால் திலகரது பொறுமையையம் உறுதிநிலையையுந் தேசாபிமானத்தையும் நேயர்காள்உற்றுநோக்குங்கள்?

XVIII. சமாதான முயற்சிகள்.

இவ்விதம் சூரத்தில் மிதவாதிகளுக்கும் தேசீயக் கட்சியினருக்கும் அபிப்பிராய பேதங்கள் முற்றிக்கலக முண்டாயதன் பயனாக, காங்கிரஸ் சபை அவ்வருடம் நிலைகுலைந்து போயிற்று. எங்கு பார்த்தாலும் பெருத்த கலவர மேற்பட்டது. இருதிறத்தினரும் உள்ளங்கொதித்து ஒருவர்மேலொருவர் சீறிக் கொண்டிருந்தார்கள்.

இது காலை எத்தகைய பிரயத்தனஞ் செய்தாவது மிதவாதிகளையும் அமிதவாதிகளையும் சமாதானப்படுத்தி மறுநாள் காங்கிரஸை வழக்கம்போல் கூட்டுவிக்க வேண்டுமெனச் சில தேசாபிமானிகள் கருதி, அதற்குரிய முயற்சிகளை யெடுத்துக் கொள்ளலாயினர். இவர்களுள் முக்கியமானவர் பாபு மோதிலால் கோஷ் என்பவர். இவர் அமிர்த பஜார் பத்திரிகையின் ஆஜிரியர். திலகருக் கன்பு வாய்ந்த நண்பர். தீவிரமான தேசீயவாதி; வயது முதிர்ந்த கிழவர். இத்தகைய பெரியார் காங்கிரஸை மேலாகக் கொண்டு ராய்யதீந்திர நாத் சௌத்ரியோடு திலகரை யணுகிப்பின் வரும் மொழிகளை யுரைக்கலாயினர்:—

"எனதாருயிர்த்தோழரே! உம்மால்தான் சமாதானம் நிலைக்க வேண்டும். அது பயன் பெறும் பொருட்டு நீர் உம்மையே இகழ்ந்து கொள்ள வேண்டும். உமது அரிய பெருந்தன்மையையும் தியாக சக்தியையும் நான் நன்கறிவேனாதலால் அதற்கு நீர் தயாராயிருப்பீரென உறுதியாய் நம்புகிறேன். மிதவாதிகள் உமது உதிரத்தைப் பானஞ்செய்ய நினைக்கிறார்கள். காங்கிரஸ் அழிந்து போகாமலிருக்க வேண்டி, நீர் ஏன் அதைக் கொடுக்கலாகாது? இக்கலவரத்திற்கு நீர் காரணமல்ல வென்று எனக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் மிதவாதிகளோ உமது பேரில் அபாண்டப் பழியைச் சுமத்தி உம்மை அவமானத்திற்குள்ளாக்க முயன்று வருகிறார்கள். நேற்று நடந்த சம்பவத்தின் பழியாவும் எனது தலையில் ஏற்றுக்கொள்ளச் சித்தமாயிருக்கிறேன்? என்று எழுத்து மூலமாய் நீர் மிதவாதிகளுக்கோர் பத்திர மளிப்பதனால் காங்கிரஸ் நிலைத்திருப்பதாயிருந்தால், அத்தகைய தன்னிகழ்ச்சிக்குத் தயாராயிருக்கின்றீரா? நீர் அப்படிச் செய்தால் உமது தேசபக்தி தெளிவாய் விளங்கும். உண்மையில் உமக்கும் கலவரத்துக்கும் யாதொரு சம்மந்தமுமில்லை யாகையால், நான் சொல்வது உமது மனச்சாட்சிக்கு விரோதமாகவே தோன்றும். மனச்சாட்சிக்கு விரோதமான காரியத்தைச் செய்தாவது தேசீய சபையைக் காப்பாற்றும்"

இவ்வார்த்தைகள் யாவும் தேசீயக் கட்சியினர் காதுகளில் நாராசம்போற் பாய்ந்தன. "தந்தையாகவும தெய்வமாகவும் நாங்கள் போற்றி வரும் திலகர் பெருமானை இவ்வளவு எளிதாய்விரோதிகளிடங் காட்டிக் கொடுக்கச் சம்மதியோம்" என்று தேசீயவாதிகள் கூறினர். ஆயினும் திலகர் சற்று நேரம் ஆலோசித்துப் புன்னகை விளங்கிய முகத்துடன் கீழ்கண்ட வார்த்தைகளடங்கிய கடிதமொன்றெழுதி மோதிலால் கோஷிடம் கொடுத்தார்.

"மிதவாதக் கட்சியினர் காங்கிரஸ் சபையை நடத்தச் சம்மதிப்பதாயிருந்தால், இவ்விகாரமான சம்பவத்தின் முழுப் பொறுப்பையும் நான் ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிறேன்"

நேயர்காள்! திலகர் பிரானது கம்பீரத் தன்மையைச் சிந்தியுங்கள்! அவரது தியாக சக்தியின் எல்லையை யுற்று நோக்குங்கள்! தனக்கெவ்வித அவமானம் நேரிடினும் எத்தகைய இடுக்கண் வந்திடினும் பாராட்டாது, தேசநன்மையையே பெரிதெனக் கருதும் திலகர் போன்றவர் இவ்வுலகில் எண்ணிறந்தனரோ? இவரை நாம் ஒளிமணி வண்ணனென்கோ!

இந்த லிகிதத்தைக் கையிலேந்திக்கொண்டு மோதிலாலும் மற்றுஞ் சிலரும் மிதவாதிகள் கூடாரத்தை நோக்கிச் சென்றனர். ஆனால் அவர்களை மேத்தா முதலியோர் மரியாதைக் குறைவாய் நடத்தவெண்ணிக் கை தட்டிச் சிரித்தார்கள். சமாதானமும் நிறைவேறவில்லை.

திருவனந்தபுரம்
21—8—20.

ஆர். கணேசன்

இன்னும் வரும்.

ஒற்றுழையாமைக் குறிப்புகள்.

ஒற்றுழையாமைப்பற்றிச் சென்னை மாகாண காங்கரஸ் கமிட்டியாரின் முடிவான அபிப்பிராயம் தெரியவில்லை. தள்ளிவைக்கப்பட்ட மேற்கண்ட கமிட்டியின் கூட்டம் சென்றவாரம் கூடியும் குழப்பத்தில் கலைந்துவிட்டது. ஒற்றுழையாமை ஒன்றே சரியான ஆயுதமென்று கூறிய தலைவர்கள் சட்டசபையைப் பகிஷ்காரம் செய்ய முடியாதென்றும் வக்கீல்கள் தங்களுடைய வேலையை விடமுடியாதென்றும் உருக்கமாகப் பேசி வருகிறார்கள்.

* *

ஆந்திர மாகாணக் காங்கரஸ் கமிட்டியார் ஒற்றுழையாமைக் கொள்கையை ஒப்புக்கொண்டு முடிவை விசேஷ காங்கரஸ் மீது பாரம் சுமத்திவிட்டனர்

* *

.ஐக்கிய மாகாண காங்கரஸ் கமிட்டியார் மகாத்மா காந்தியின் ஒற்றுழையாமைக் கொள்கையை எற்று முதற்படியாகப் பட்டங்களைத் துறப்பதும், வழக்குகளைப் பஞ்சாயத்தில் தீர்த்துக் கொள்வதும், அந்நிய சாமான்களை விலக்குவதும் கவர்ன்மெண்டிற்குக் கடன் கொடுக்கக்கூடாதென்று மறுப்பதும், புதிய சட்டசபையைப் பகிஷ்காரம் செய்வதும் கன்னாட் கோமகன் வரவேற்பை விலக்குவதும் அவசியமென்று தீர்மானித்தனர்

* *

டெல்லி காங்கரஸ் கமிட்டியார் ஒற்றுழையாமையை ஆதரித்து விசேஷ காங்கரஸ் முடிவு செய்யும் வரையில் இந்த விஷயத்தை நிறுத்தி வைத்துக்கொள்வதாகத் தீர்மானம் செய்தனர்

* *

மத்திய மாகாண காங்கரஸ் கமிட்டியார் ஒற்றுழையாமைக் கொள்கைகளை ஆதரித்துத் தீர்மானம் செய்தனர். அதன் அனுஷ்டான முறைகளைப்பற்றிப் பலத்த விவாதம் நடந்ததேயொழிய முடிவு ஒன்றும் ஏற்படவில்லை.

* *

பம்பாய், பஞ்சாப், வங்காளம் இவைகளின் காங்கரஸ் கமிட்டியார்கள் ஒற்றுழையாமைக் கொள்கையை ஆதரிக்கின்றனர். ஒற்றுழையாமையை அனுஷ்டிப்பதைபபற்றி முடிவான அபிப்பிராயமொன்றும் தெரிவிக்கவில்லை.

* *

கீழ்க்குறிப்பிட்டிருக்கும் கனவான்கள் ஒற்றுழையாமையை முன்னிட்டுத் தங்கள் தங்களுடைய கௌரவ பதவிகளையும் பட்டங்களையும் ராஜிநாமா செய்திருக்கிறாகள். இவர்கள் ராஜிநாமா செய்த விஷயம் பத்திரிகைகளில் முன்னரே வெளிவந்துவிட்டதென்றாலும் இவர்களுடைய பெயர்கள் ஜாபிதாவைக் கோவையாகப் பிரசுரிக்கிறோம்:—

மௌலானா மௌல்வி ஷாஸாகிட் ஹுசேயின் சாகிப், தம்முடைய ஷாம்ஸுல் உலாமா பட்டத்தையும் பென்ஷனையும் ராஜிநாமாசெய்துவிட்டார். கான்பகதூர் டி. அமிருடீன் சாகிப் தமது கான்பகதூர் பட்டத்தையும், கான்சாகிப் மொகிதீன் ஸாகிப் தமது கான்சாகிப் பட்டத்தையும், கான்ஸாகிப் ஸையத் அப்துல் காதர் சாகிப் ஜிலானி தமது கான்ஸாகிப் பட்டத்தையும், கௌரவ பிரிஸிடென்ஸி மாஜிஸ்டரேட் பதவியையும் ராஜிநாமா செய்துவிட்டார்கள். ஆம்பூர்வாசிகளான பெங்கி ஹியாத் பாட்சா சாகிப், அப்துல் ரகிமான் ஸாகிப், முகம்மத் காஸிம ஸாகிப், எச். எஸ். செங்கலப்பா, சென்னியா நாயுடு முதலியவர்கள் தங்களுடைய கௌரவ மாஜிஸ்டரேட் பதவியையும், பெஸவாடா குலாம் மொகிதீன் சாகிப் தமது கௌரவ மாஜிஸ்டரேட் பதவியையும், சேலம் வாசிகளான அப்துல் ஹமீத் ஸாகிப், ஸையத் அமீர் சாகிப், எஸ். கே. சடகோப முதலியார், காஸி முகமத் ஷெரிப் சாகிப், எம். எஸ். பாபாஜி சாகிப் எ. எஸ். அப்துல் காதர் சாகிப், என். வி. கிருஷ்ண செட்டியார், தர்மபுரி வாசிகளான பண்டிட் அருணாசலய்யர் டி. எம். முகமத் கான்ஸாகிப் முதலியவர்கள் தத்தம் கௌரவ மாஜிஸ்டரேட் பதவிகளை ராஜிநாமா செய்துவிட்டார்கள். சைதாப்பேட்டை வாசியான ஜனாப் அபாஸ்ஹுஸேயின் சாகிப் தமது கௌரவமாஜிஸ்டரேட் பதவியை ராஜிநாமா செய்துவிட்டார்.

* *

சேலம் மிட்டாதார் ஸ்ரீமான் எம். பத்தமநாப செட்டியார் தமது முதல் தா கௌரவ மாஜிஸ்டரேட் பதவியை ராஜிநாமா செய்துவிட்டார்.

* *

மன்னார்குடி இராஜகோபால் ரைஸ்மில் சொந்தக்காரரான மிஸ்டர் டி. வி. குருசாமி ஐயர் வோட்டர்களின் ஜாபிதாவைப் பரிசீலனை செய்யும் கமிட்டியின் அங்கத்தினர் பதவியை ராஜிநாமா செய்துவிட்டார்.

* *

வாணியம்பாடி கிலாபத் கமிட்டியின் காரியதரிசியான மிஸ்டர் எச். அப்துல் ரகிம் தமது திருப்பத்தூரில் வகித்துவந்த கௌரவமாஜிஸ்டரேட் பதவியை ராஜிநாமா செய்துவிட்டார்.

* *

பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த குஜராத் பிரதேசத்தின் 4 வது மகாநாடு கூடியது. அதில் அக்கிராசனம் வகித்த மிஸ்டர் அபாஸ்டயாஜி ஒற்றுழையாமை யொன்றே நிராயுதபாணிகளாக விருக்கிற இந்தியர்களுக்கு எற்ற ஆயுதமென்று அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்.

* *

ஒற்றுழையாமையைப்பற்றித் தேசத்தில் பலவாறாக அபிப்பிராயங்கள் தோன்றியிருக்கின்றன. தேசீயக் கட்சியினர்களில் சில பிரமுகர்கள் காங்கரஸ் மீது பாரத்தைச் சுமத்திவிட்டார்கள். எப்படியாகிலும் ஒற்றுழையாமையை விசேஷ காங்கரஸ் எற்றுக்கொள்ளும்படி செய்ய வேண்டுமென்றும், அதை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர முயற்சிகள் செய்யவேண்டுமென்றும், முஸ்லிம்களும் இந்துக்களும் ஒருமுகமாய் இருக்கிறார்கள். முஸ்லிம்கள் கல்கத்தாவில் கூடும் விசேஷ காங்கரஸுக்குச் சென்னை மாகாணத்திலிருந்து நூற்றுக்கணக்காகப் பிரதிநிதிகள் செல்லுகிறார்கள். விசேஷ காங்கரஸின் முடிவை எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

கிலாபத் குறிப்புகள்.

இங்கிலாந்திற்குச் சென்றிருந்த கிலாபத் தூதர்களின் சார்பாக மௌலானா முகம்மதலி சென்றவாரம் இந்தியாவிற்கு இங்கிலாந்திலிருந்து வந்திறங்கிய மிஸ்டர் பேடல் மூலமாக ஒரு செய்தியனுப்பியிருக்கிறார். தாங்கள் பிரிட்டிஷ் பிரெஞ்சு, இதாலி, ஜப்பான் முதலிய நாடுகளின் மந்திரிகளுக்குக் கிலாபத் விஷயமாக இந்திய முஸ்லீம்களுக்கிருக்கிற உணர்ச்சியை சவிஸ்தாரமாக அறிவித்ததாகவும், அவர்கள் ஒரே பிடிவாதமாய் இருந்து விட்டதாகவும், தாங்கள் கட்டளையிட்டபடி செய்ய வேண்டிய வேலைகளைச் செய்து விட்டதாகவும் இனி என்ன வேலைகள் செய்ய வேண்டுமோ அவைகளைத் தெரிவிக்கும்படியும் மத்திய கிலாபத் கமிட்டியாருக்கு அறிவித்திருக்கிறார்.

* *

துருக்கி இளவரசர் தாம் இராஜ்ய நிர்வாகத்தை இனி எற்றுக்கொள்ளப் போவதில்லை யென்று உறுதியாகக் கூறிவிட்டதாகவும் சுல்தான் இதற்குச் சம்மதிக்க வில்லை யென்றும் லண்டன் டைம்ஸ் பத்திரிகை நிருபர் அறிவிக்கிறார்.

* *

அரேபியாவிற்கும் சிரியாவிற்கும் பூரண சுதந்தரம் அளித்து விடுவதையும் ஆர்மீனியா குர்டுஸ்தானம் லாஸிஸ்தானம் இவற்றிற்குப் பூரண சுய நிர்ணயம் அளித்துவிட வேண்டுமென்பதையும் ருஷ்யர்கள் ஒப்புக்கொண்டு கெமல் பாஷாவின் கடிதத்திற்குப் பதில் எழுதியிருக்கிறார்கள்.

* *

பஞ்சாப் கிலாபத் கமிட்டியின் காரியதரிசி ஜனாப் ஸாபர் அலிகான் கொஞ்சகாலம் பொறுத்து முஸ்லீம்கள் ஆப்கானிஸ்தானத்திற்கு ஹிஜரத் செய்யலா மென்றும் இப்போது அது நிறுத்தப்படுவது அவசிய மென்றும் எல்லா முஸ்லிம்களையும் கேட்டுக் கொள்ளுகிறார். மேலும் அவர் கவர்ன்மெண்டார் ஹிஜரத் செய்வதைத் தடுக்கக் கூடாதென்றும் வழக்கம்போல் மத விஷயத்தில் தலையிடாமலிருக்க வேண்டு மென்றும் ஒருகால் ஹிஜரத்தில் தலையிட்டால் முஸ்லிம்களுடைய மனம் புண்ணாகி பெரிய ஆபத்துக் கிடமாகு மென்றும் பிரிட்டிஷாரின் பல மெல்லாம் சேர்ந்து திரண்டு வந்தாலும் அடக்க முடியாதென்றும் இந்தியா கவர்ன்மெண்டாருக்கு அறிவித்திருக்கிறார்.

* *

மெஸப்பொதேமியா அரேபியா, பர்ஷியா, துருக்கி முதலிய தேசங்களில் இந்தியத் துருப்புகளைக் கொண்டு அவ்வந்த நாட்டார்களின் உரிமைகளைப் பறி முதல் செய்து அவர்களுடைய ராஜீய லட்சியங்களை முரட்டுப் பலத்தால் அடக்குவது கூடாதென்றும் பரிட்டிஷார் அவ்வந்த நாடுகளிலிருந்து இந்தியத் துருப்புகளை அப்புறப்படுத்த வேண்டுமென்றும் லண்டனில் சமீபத்தில் எஸக்ஸ் மண்டபத்தில் ஒரு பெருங்கூட்டம் கூட்டப்பட்டது. இந்தியர்கள் அதிகமாகவும் பிரிட்டிஷார்கள் சொற்பமாகவும் விஜயம் செய்திருந்தார்கள். ஸ்ரீ சரோஜினி நாயுடு உருக்கமாகப் பேசி இந்திய வீரர்கள் தங்கள் நாட்டில் சுதந்தரமின்றி யிருக்கும்போது பிற நாட்டார்களுடைய சுதந்தரங்களையும் கோரிக்கைகளையும் கூலிகளாக அமர்ந்து அடக்க எங்ஙனம் போகிறார்கள்? என்று வருத்தத்துடன் குறிப்பிட்டார்.

* *

அங்கோராவில் எற்படுத்தப் பட்டிருக்கும் துருக்கி நாஷனல் கவர்ன்மெண்டின் பிரிஸிடென்டான மெஸ்டபால் கெமால் பாஷா எல்லாத்

கொக்கிப்புழு வியாதி அல்லது சோகை

சென்ற மீ 25ந் தேதி புதன்கிழமை மாலை 5 மணிக்குத் தஞ்சை கலியாண சுந்தரம் ஹைஸ்கூல் இயற்கை சாஸ்திர ஞான அபிவிருத்தி சங்கத்தில் ஸ்ரீமான் டாக்டர் கிருஷ்ணய்யா ஓர் உபந்யாசம் செய்தார். கிருமி ராசிகள் மானிட சரீரத்தில் எவ்வித வியாதிகளை உண்டு பண்ணுகின்றன என்னும் விஷயம் வெகு விஸ்தாரமாகவும் யாவரும் அறிந்து கொள்ளக்கூடிய எளிய நடையில் எடுத்துரைக்கப் பட்டது. விசேஷ நான்கு வியாதிகளைச் சொல்லி, அவ்வியாதிகளுக்குக் கிருமிகள் எவ்விதம் காரண பூதமாயிருக்கின்றன வென்று சொன்னார். பெருங்கால் அல்லது யானைக்கால் வியாதி பரவும் விதம் எவ்விதமென்பது முதலில் எடுத்துச் சொன்னார். மானிட சரீரத்தில் ஊந் தண்ணீர் ஓடும் குழாய்களில் ஒருவகை கிருமிகள் வசிக்கிறதாகவும் அவை இரவில் சரீரத்தின் சர்ம இரத்தக் குழாய்களில் வந்து மேய்வதாகவும் கொசுக்கள் கடித்து இரத்தத்தை உருஞ்சும்பொழுது இக்கிருமிகளின் முட்டைகளையும் இரத்தத்தோடு எடுத்து பிறரைக் கடிக்கையில் அம்முட்டைகளை அவர்களின் சரீரத்தில் உட்செலுத்துவதாகவும், ஆகையால் கொசுக்களே இவ்வியாதி பரவுவதற்குக் காரணமாக இருப்பதாகவும் சொன்னார். மேலும் கெட்ட தண்ணீர் கொசுக்கள் ஜனிப்பதற்குக் காரணமாதலால், இதுவே இவ்வியாதி பரவ ஒரு காரணமாக இருக்கிறதாகவும், உதாரணமாக நமது தஞ்சையில் குழாய்கள் வழியாய் நல்ல தண்ணீர்பட்டணத்திற்குக் கொண்டு வருவதற்கு முந்தி இந்த வியாதி அதிகமாய்ப் பீடித்துக்கொண்டிருந்ததென்றும், இப்பொழுது நல்ல தண்ணீர் கிடைக்கையில் அதிகமாக இந்த வியாதியின் மிகுதி குறைவுபட்டிருக்கிறதென்றும் யாவரும் அறியக்கூடிய விதமாக நல்ல தண்ணீர் சப்ளை உள்ள இடங்களிலும், கழிவு தண்ணீர் வெளிச்செல்ல நல்ல சாதனங்கள் உள்ள இடங்களிலும் இவ்வியாதி பரவுவதில்லை என்றும் எடுத்துச் சொன்னார்.

மேலும் நமது ஜில்லாவில் பெரும்பாலும் ஜனங்கள் குடலில் ஒருவகைக் கொக்கிப்புழுவசிப்பதால் அதனால் உண்டாகும் வியாதியால் பீடிக்கப் படுகின்றனர்.

தேசங்களின் அந்நிய நாட்டு மந்திரிகளுக்கு ஒரு கடிதம் எழுதி அதில் நேசக்கட்சியார் கான்ஸ்டான்டி நோபில் நகரத்தை வசப்படுத்திக் கொண்டும் சுல்தானைக் கட்டுப்படுத்தியும் பெரிய அநியாயங்களைச் செய்தும் வருகிறார்களென்றும், படித்தவர்கள் சிறை செய்யப்படுகிறார்களென்றும், துருப்புகளைக்கொண்டு வீடுகளிலுள்ளவர்கள் பயமுறுத்தப் படுகிறார்களென்றும், குறிப்பிட்டுத் துருக்கியர்களுடைய நியாயமான கோரிக்கைகளை அனுப்பியிருக்கிறார்.

* *

இங்கிலாந்திலிருக்கும் இந்தியக் கிலாபத் தூதர்கள் துருக்கி உடன் படிக்கையை ஆராய்ச்சி செய்து பிரிட்டிஷ் பிரதம மந்திரியாருக்கு இந்திய முஸ்லிம்களுடைய கோரிக்கைகளை எழுதி அனுப்பியிருக்கிறார்கள். அதில் இப்பொழுதுள்ளபடி துருக்கி சமாதான உடன்படிக்கை இந்திய முஸ்லிம்களுக்குப் பிடிக்காதென்றும், துருக்கிய நாடுகளை நேசக் கட்சியார்களின் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது அநீதியென்றும் இஸ்லாத்திற்கு ஆபத்து வராமல் காப்பதே இந்திய முஸ்லீம்களுடைய கடமையென்றும் குறிப்பிட்டு விவரமாக எழுதியிருக்கிறார்கள்.

ஜன நோக்கம்.

குறிப்பு:—நிருப நேயர்கள் எழுதும் கடிதங்களில் காணப்படும் அபிப்பிராயங்களுக்குப் பத்திராசிரியர் பொறுப்பாளியல்லரென்பதைச் சந்தா நேயர்கள் கவனிக்க விரும்புகிறோம்.—

தஞ்சை முனிஸிபாலிடியின் நிர்வாக ஊழல்கள்.

ஐயா,

இந்நகர நிர்வாக ஊழல்களைப்பற்றி நான் என்ன சொல்வேன்? எவ்வாறு எழுதுவேன்? முனிசிபல் இலாகாவில் ஓர் இலாகாவேனும் சரியாக நிர்வாகம் செய்யப்பட்டு வந்தால் வரி செலுத்துவோர்கள் ஒருவாறு ஆறுதலடைவார்கள். முக்கியமாகச் சுகாதார இலாகாவும் தண்ணீர் சப்ளை இலாகாவும் அநியாய ஊழல்களாயிருக்கின்றன. என்ன காரணத்தினாலோ வீட்டு கக்கூசுகள் சரியாகச் சுத்தம் செய்யப்படுவதில்லை. தெருக்குப்பைகள் சுத்தமாக கூட்டப்படவில்லை. சாக்கடை நீர் அந்தந்தவிடத்தில் தேங்கிக்கிடப்பதால் யானைக் கொசுக்கள் தெருவில் கொஞ்சம் நேரம் நின்று பேசுவதற்குள்ளாகக் கால்களைக்கடிக்கின்றன. சில நிமிஷங்களுக்கெல்லாம் கடித்தவிடம் உண்டையாக வீங்கிப்போய்விடுகிறது. திருவாதியில் யானைக்கால் வியாதி பரவுவதற்குக் காரணம் பெரிய கொசுக்களாகும். இந்நகரில் சில காலம் யானைக்கால் வியாதி அதிகமாகப் பரவாமலிருந்ததுபற்றி எல்லோரும் சந்தோஷமடைந்தார்கள். இப்போது வருத்தப்படுவதற்குக் காலம் வந்துவிட்டது. விளக்குகள் முக்கியமாக சந்துகளில் ஏற்றப்படாமலிருக்கின்றன. முனிஸிபல் கவுன்ஸிலர்கள் ஒரு நாள் இரவு ஏதேனும் சில சந்துகளைப்போய் பார்த்தால் நன்கறிவார்கள். சாக்கடைகள் மண்ணால்மேடிட்டுக் கிடக்கின்றன நான் இதற்கெல்லாம் காரணமென்னவென்றும் விசாரித்துக்கேட்டதில் குமாஸ்தாக்களுக்கும சிபந்திகளுக்கும்காலாகாலத்தில்சம்

இவைகள் இரத்தத்தைத் தமக்கு வேண்டிய அளவுக்கு மேல் உருஞ்சுவதால் நாளடைவில் சரீரத்தில் இரத்தம் குறைவு பட உடம்பு வெளுத்து, தலைவலி, தூக்கம் இல்லாமை, ஓய்வு, சுரம் முதலியவைகளால் ஜனங்கள் பீடிக்கப்படுகிறார்கள் இத்தக்கிருமிகள் மலத்தோடுகழிவுபட மலம்பயிர்வகைகள் வளரும் இடங்களில்போய்ச்சேர, அவை காய்கறிப் பயிர்களின கீரைகளில் ஒட்டி நிற்க, அவைகளைப் புசிக்கையில் அவை உட்செல்லுவதாகச் சொன்னார். . மேலும் வெறுங்காலாக நடக்கையில் இவைகள் கால்களில் தொத்தி உட்புகுந்து இரத்தத்தால் அடிபட்டு இருதயம், சுவாசாசயம் முதலிய இடங்களிற் செல்ல, சுவாசாசயத்தினின்று தொண்டைக்குத் தள்ளப்பட்டு அன்னம் செல்லும் குழாயினுட் புகுந்து வயிற்றில் தங்கி அங்கிருந்து குடலுக்குச் சென்று அங்கு தொத்தி நிற்கும் நிலைமையையும் அதிக விஸ்தாரமாகச் சொல்லி, பாதரக்ஷகமான செருப்பு முதலியவை தரிப்பதின் அத்தியாவசியத்தை எடுத்து வெளியிட்டார்.

மேலும் மலேரியா சுரம் ஒருவகைக் கிருமியால் ஏற்படுகிறதென்றும் அந்த வியாதிபரவுவதற்குக் கொசுக்களே காரணம் என்றும் எடுத்துரைத்தார்.

இவ்வித உபந்யாஸம் செய்த டாக்டர் கிருஷ்ணய்யா அவர்களுக்குத் தஞ்சை வாசிகள் மிகக் கடமைப் பட்டிருக்கிறார்கள். மேலும் சுக வாழ்க்கைக்கு அநுகூலமான இவ்வித உபந்யாஸங்கள் இச்சாஸ்திரம் அறிந்துள்ள பல டாக்டர்களும் உபந்யஸிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பளம்கொடுபடாததாகுமென்றுசிலர்கூறுகிறார்கள். முனிஸிபல் நிர்வாகம் அடியோடு மாற்றப்பட்டுச் சீர்திருத்தப்படவேண்டுவது அவசியமாகும். வரப்போகிற புதிய முனிஸிபல் சபைக்கு ஜனங்களின் க்ஷேமத்தில் பொறுப்புள்ள கவுன்ஸிலர்களை வரி செலுத்துவோர்கள் தெரிந்தெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வரி செலுத்துவோர்களின் சங்கத்தார் இத்துறையில் முயற்சியெடுத்தால் நலமாயிருக்கும். தாங்களும் அடிக்கடி எழுதிவர வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்
18—8—20 } கோ. இராமகிருஷ்ணபிள்ளை

இந்நகர முனிஸிபாலிடியாரவர்களின் நிர்வாக ஊழல்களைபற்றி நமக்குப் பல கடிதங்கள் வந்திருக்கின்றன. இவைகளெல்லாவற்றையும் நாம் கண்டிப்பாய்ப் பிரசுரிக்கவேண்டுமென்று அவரவர்கள் தாங்கள் எழுதிய கடிதங்களில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் நம் நிருப நேயர்களுக்கு ஒரு யோசனைசொல்லுகிறோம். . பொதுவாக "முனிஸிபாலிடியின் நிர்வாகம் அப்படியிருக்கிறது; இப்படியிருக்கிறது என்று எழுதினால் பிரயோஜனமில்லை. இன்னின்ன இலாகாவைச் சேர்ந்த இன்னின்னவிடத்தில் குறைகள் காணப்படுகின்றன. ஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள்" என்றுகுறிப்பிட்டு எழுதினால் முனிஸிபாலிடியிலுள்ள அந்தந்த இலாகாவைச்சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் அக்குறைகளை நீக்கப் பரிகாரங்கள்தேட முடியும். நாமும் அக்குறைகளை முனிஸிபாலிடியார்க்கு எடுத்துக்காட்டி வற்புறுத்தலாம். ஆனதுபற்றி, முனிஸிபாலிடியில் ஜனங்கள் அனுபவிக்கும் கஷ்டங்களையும் அசௌகரியங்களையும் உள்ளபடி குறிப்பிட்டுச் சுருக்கமாக எழுதியனுப்புமாறு வேண்டிக்கொள்கிறோம். வரி செலுத்துவோர்களின் சங்கத்தார் தங்களுடைய உரிமைகளையும் கவுன்ஸிலர்களின் கடமைகளையும் வரி செலுத்தும் பொதுஜனங்களுக்கு எடுத்துச் சொல்வது அவசியமாகும். முனிஸிபாலிடியின் நிர்வாக ஊழல்களைப்பற்றிப் பொதுப்படையாக எழுதியிருக்கும் கடிதங்களைப் பிரசுரிக்கமுடியாமைக்கு வருந்துகிறோம்:—பத்திராதிபர்

தஞ்சை நகரில் குடிக்கூலிக் கஷ்டம்

ஐயா,

உங்களுடைய சென்ற வாரப்பத்திரிகையில் குடிக்கூலி விஷயமாகச் சென்னைச் சட்டசபையில் ஒரு மசோதா கொண்டுவரப்பட்டதையும், அது அநியாயமாகத் தோற்கடிக்கப்பட்டதையும் இடைநிலைவிளக்கில் குறிப்பிட்டிருந்தீர்கள். வாடகை ஒன்றுக்கு மூன்று மடங்கு வீதம்வீட்டுக்காரர்களில் அநேகர் உயர்த்திவசூலித்து வருகிறார்கள். அவர்கள் வீடுகளை ரிபேர் செய்வதும் கிடையாது. "ஐயா! ரிபேர் செய்யுங்கள்" என்று கேட்டால் அவர்கள் "இஷ்டமிருந்தால் குடியிருங்கள்; இல்லாவிடில் வீட்டைக் காலிபண்ணி விடுங்கள்" என்று அலட்சியமாகச் சொல்லுகிறார்கள். ஒருவர் வீட்டைக் காலிசெய்தால் அந்த வீட்டிற்கு மற்றொருவர் வரும் போது நூற்றுக்கு 25 வீதம் வாடகையை உயர்த்திச் சில சில்லரை ரிபேர்களைச் செய்து ஏமாற்றிவிடுகிறார்கள். இவ்வாறாகவே தஞ்சை நகரில் வீட்டுச் சொந்தக்காரர்கள் அக்கிரமம் செய்கிறார்கள். சில வீட்டுக் காரர்கள் காலி செய்வதற்கு ஒரு மாத நோட்டீஸ் கூட கொடுப்பதில்லை. நான் இரண்டொரு வாரமாக எனக்கு ஒரு வீடுவேண்டியதன் நிமித்தம் பல விடங்களில் விசாரித்தேன். வீட்டுக்காரர்கள் சொல்லும் வாடகை, பக்கத்தில் விசாரித்துப் பார்த்தால் நூற்றுக்கு 25 வீதத்திற்குக் குறையாமல் 75 வீதத்திற்கு மேற்போகாமல் அவ்வளவு உயர்வாக விருக்கிறது. இவர்கள்வேண்டுமென்றே லாபம் சம்பாதிக்கவேண்டிய நிமித்தம் மேற் குறிப்பிட்டவாறு செய்கிறார்கள். இவர்கள் குடியிருப்போர்களிடம் அதிகவாடகை வாங்குவதும் முனிஸிபாலிடியார்களுக்கு வாடகையைக்

குறைத்துச் சொல்வதுமாயிருக்கிறார்கள். பம்பாய் கல்கத்தா இரங்கூன் முதலிய நகரங்களில் வீட்டுக்காரர்கள் செய்த அக்கிரமங்களைச்சகியாமல் கவர்ன்மெண்டார் ஒரு சட்டம் செய்து வீட்டுக்குத் தகுந்தபடி வாடகையைக் கட்டுப்படுத்தி விட்டார்கள். சென்னை நகரிலும் தஞ்சை, திரிச்சி மதுரை, கும்பகோணம் போன்ற நகரங்களிலும் வீட்டுவாடகையைக் கட்டுப்படுத்த ஒரு சட்டமிருக்க வேண்டியது அவசியமாகும். மற்றமாகாணங்களில் கவர்ன்மெண்டார் ஜனங்களுக்கு எவ்வளவோ நன்மைகள் செய்துவர சென்னைக் கவர்ன்மெண்டார் மாத்திரம் ஜனங்களுடைய க்ஷேமத்தில் பராமுகமாயிருக்கக் காரணமென்ன? சட்டசபையிலுள்ள பொறுப்பற்ற அங்கத்தினர்கள் குடியிருப்போர்களுடைய கஷ்டங்களை அறிந்திருந்தும், அவைகளுக்குப் பரிகாரம் தேடாமலிருந்து வருவது வெறுக்கத் தகுந்ததாகும். இந்த மசோதா தோற்றுப் போனாலும் விடாமல் நியாயக்கிளர்ச்சி செய்து எங்குக் குடிகூலி அதிகமாக வாங்கப்படுகிறதோ அந்தந்த முனிசிபாலிடிகளில் வாடகையைக்கட்டுப்படுத்தக்கூடிய ஒரு சட்டம் அவசியமிருக்க வேண்டுமென்பதைக் கவர்ன்மெண்டாருக்கு நாம் அறிவிக்க வேண்டும். இதன் பொருட்டு முனிஸிபல் நகரங்களில் "குடிக்கூலிக்குக் குடியிருப்போர்கள் சங்கம்" ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டுவது அவசியமாகும். வாடகைக்குக் குடியிருப்போர்களுடைய கஷ்டங்களை அவ்வப்போது தங்கள் பத்திரிகைகள் மூலமாக முனிசிபாலிடியார்களுக்கும் கவர்ன்மெண்டாருக்கும் வெளியிடுவீர்களென்று நம்புகிறேன்.

நெல்லுமண்டி சந்து } டி. எஸ். ஐயங்கார்
தஞ்சாவூர் }

குறிப்பு:—தஞ்சை நகரில் நாம்பார்த்தளவில் வீட்டுசொந்தக்காரர்களில்சுமார் நூற்றுக்கு25பேர் வீதம் குடியிருப்போர்களுடைய சௌகரியங்களைக்கவனித்து அவ்வப்போது வீடுகளைப்பழுதுபார்க்கிறார்களென்பதையும், நியாயமான வாடகை வசூலித்து வருகிறார்களென்பதையும் நாம் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. வீட்டுச் சொந்தக்காரர்களெல்லோரையும் ஒன்றாக மதிக்கக்கூடாதென்றே இதைக் குறிப்பிடலானோம். நாம் இவ்வாறு குறிப்பிடுவதினால் ஸ்ரீமான் ஐயங்கார் எழுதியதைக்குறைத்துப்மதிப்பதாகக் கருதக்கூடாது.

கவனிப்பாரில்லையோ?

ஐயா,

கும்பகோணம் தாலூகா திருவிசலூர் கிராமத்தில் நாராயண சாஸ்திரிகள் குமாரரும் மதுரையில் நீண்ட காலம் வக்கீலாயிருந்தவருமான ஸ்ரீமான் நீலகண்ட சாஸ்திரிகள் தம்மரண காலத்தில் இந்த ஊரில் 12 பையன்களுக்கு இலவசமாய்ச் சாப்பாடு போட்டும் சம்பளமில்லாமலும் ஸம்ஸ்கிருத வேதமும் சாஸ்திரமும் சொல்லிக்கொடுப்பதற்காக ஒரு பாடசாலை ஏற்படுத்தி ரூ. 20000 இருபதினாயிரம் மூலதனமாகவைத்து, அந்த வித்தியாசாலைக்கு டிரஸ்டியாகக் காலஞ்சென்ற டிப்டிகலெக்டர் ஸ்ரீமான் T. கோபாலசாமி அய்யர் அவர்களை நியமனம்செய்திருந்தார். ஷ வித்தியாசாலை சுமார் 25 வருஷ காலமாக ஷ கோபாலசாமி அய்யர், கும்பகோணம் வக்கீல் மகா-ா-ா-ஸ்ரீ A. C. நாராயணசாமி அய்யர் ஆகிய இவர்களுடைய மேற்பார்வையில் செவ்வனே நடைபெற்று வந்தது. ஷ டிரஸ்டி கோபாலசாமி அய்யர் இறந்த பிறகு ஸ்ரீமான் A. C. நாராயணசாமி அய்யர் அவர்கள் தம்மிடமிருந்த மிகுதி வட்டிப் பணத்தைக்கொண்டு ஒரு வருஷ காலம் நடத்திவந்தார் தற்காலம் ஷ கோபாலசாமி அய்யரவர்களின் வார்சுகளின் அசிரத்தையினாலும் ஸ்ரீமான் நாராயணசாமி அய்யர் அவர்களின் கவனக்குறைவினாலும் 15 மாதகாலமாக வித்தியாசாலை நடைபெறவில்லை. இந்தியாவில் எங்கும் தேசியக்கல்வி கூக்குரலாயிருக்கும் இந்தக்காலத்தில் வெகு நாளாய் நமது அருமையான வடமொழியைப் பரவச்செய்துவந்த இந்த வித்தியாசாலை நடைபெறாமல்போனது மிகவும் விசனிக்கத்தக்கதே. இது விஷயம் தஞ்சை ஜில்லா கலெக்டர் அவர்களுக்கு மனுசெய்துகொண்டும் அநேகதேசாபிமானிகளிடம் முறையிட்டும் பயனில்லாமற் போய்விட்டது. வித்தியாசாலைக்கென்று ஏற்படுத்தியிருந்த சொந்தக் கட்டிடம் இடிந்துவருகிறது. ஆகையால் தேசீயக்கல்வியில் ஊக்கமுள்ள பிரபுக்கள் இந்த வித்தியாசாலையை முன் ஸ்திதிக்கு கொண்டுவர முயல்வார்களென்று நம்புகிறேன்.

திருவிசலூர் வாசி.

கள்ளர் குலத்தலைவர்களுக்கு ஒரு விண்ணப்பம்

கள்ளர் குலத்தலைவர்காள்!

ஊர்நலம், அவ்வூர்த் தலைமையாளராலும்; அவை நலம், அவ்வவைத் தலைமையாராலும்; தேசநலம், அத்தேசத் தலைமையாளராலும் பிரகாசிக்கப்படுவனபோல், ஒரு வகுப்பினர் நலமும் அவ்வகுப்பின் தலைவராலேயே சிறந்து விளங்குமென்பது என்துணிபு. அன்றியும், அறிவானுயர்ந் தோர்கொள்கையுமஃதே. இதற்கு, பின்னோர் உய்யும் வண்ணம் முன்னோர் முன்னர் எழுதிவைத்த அறநூல்களே சான்றாகும். தாங்களும் அறிந்ததே. நிற்க, இவ்வுலகத்தில் ஒவ்வொரு வகுப்பினரும் முன்னுக்கு அவ்வக் குலத்தலைவர்களின் நன்முயற்சிகளினால் அநேக மகாநாடுகள் கூடியும், அம்மட்டோடு நில்லாமல் தன் தன் ஜாதிமுன்னேற்றத்திற்கு ஏற்ற காரியங்களை ஆராய்ந்து செய்தும், தினே தினே பூர்வபக்கச் சாதிரன்போல், வளர்ந்து வரும் நிலையை யான் தாங்களுக்கு அதிகம் சொல்லுவது மிகையே. நம் கள்ளர் குலந்தானோ இக்காலத்தில் சுபக்திட்டினால் தலைவர்களற்று தாழ்மையுற நேர்ந்தது? அந்தோ பரிதாபம்! இஃதென்ன பாவக்கொடுமை? புதிய சக்தியாகிய கிரணங்களை வீசிக்கொண்டு, உலகமுன்னேற்றமென்னும் சூரியன் உதயகிரியினின்றும் உதயமாகி அதிகதூரம் முன்வந்துவிட்டான். இச்சமயத்தில் நீங்கள் உறக்கமுற்றிருப்பின் நம்கதி என்னாகும்? ஏற்கனவே ராஜாங்கத்தாரால்நம்மைத்தாழ்ந்த வகுப்பாரோடு எண்ணப்பட்டும் அதற்கிணங்க நடத்தப்பட்டும்,வந்துகொண்டிருக்கிறோம்.தற்போது மதுரைப்பக்கத்தில் நடந்தநம்முடைய போவனமும் பெருவதையுமே அதற்குஅத்தாட்சியாகும். இப்படியே இன்னும் வாளா இருந்துவிடின் சிறிது காலத்துக்கெல்லாம் பல விதத்திலும் நம்மிலும் தாழ்ந்த ஜாதி உலகத்திலேயே இல்லையென்று ஆய்விடும். என் மனம் பதருகின்றதே. தங்கள் மனமும் பதரும் என்பதில் சந்தேகமில்லை.

அன்பர்காள்! நமதாட்சியெங்கே? அதனைநடத்திவந்ததன்மையெங்கே? புகழெங்கே? இந்தியபுராதனத் தலைமை யெங்கே? நாகரீகமெங்கே? இவ்வுலகில் பலவகையானும் மேன்மையுற்று இருமையின் பத்தை நாடும் மதியெங்கே? இவையெல்லாம் குறைந்து வெயிலிற்றோணறிய புழுக்கள் போல இடருறக்காலம் நம் வகுப்பினர்களுக்கு நேரவேண்டுமா? இந்த ஆபத்துக்காலத்தில் எங்கள் தலைவருக்குள்ள பெருந்துயிலை நீக்கிஉணர்ச்சியை ஊட்டலாகாதா?

ஆதலால் இனி ஒரு கணப்பொழுது கூடத் தாமதியாது நம் வகுப்பினர் முன்னேற்றத்துக்குள்ள துறைகளிற்படிய முன் வருவீர்களென நான் உண்மையாக நினைக்கிறேன்.

இளங்காடு. } M. பாலகோதண்டபாணிச்
25—8—1920. } சேதுராயன்.

மதிப்புரை.

கதைப்பூங்கோத்து.

சிறுவர்கள் எளிதாகப் படிப்பதற்கென்றே இக்கதைப்பூங்கொத்து காலம் சென்ற ஸ்ரீமத் வி. கோ சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள் குமாரன் ஸ்ரீமான் வி. சு. நடராஜனால் எழுதப்பட்டது. இதில் முப்பது கதைகளிருக்கின்றன. நல்ல நீதிகளைச் சிறுகதைகள் மூலமாக நல்ல நடையில் எழுதியிருப்பது பற்றி நாம் மிகவும் சந்தோஷப்படுகிறோம். இவ்வரிய சிறிய புஸ்தகம் எலிமெண்டரி பாடசாலை கீழ்த்தர வகுப்பு சிறுவர் சிறுமிகளுக்கு உபயோகமாயிருக்குமென்பதில் சந்தேகமில்லை. எலிமெண்டரி உபாத்தியாயர்களும், பாடசாலை மானேஜரும் இச்சிறிய நூலை வாங்கி ஆதரிப்பார்களென்று நம்புகிறோம். இதன் ஆசிரியர் மிக்க சிரமமெடுத்துக்கொண்டு சிறுவர்களுக்கு இது உபயோகமாகும்படி செய்தது விசேஷமாகும். இதன் விலை இரண்டரையணா, வேண்டுவோர் ஸ்ரீமான். வி. சு. நடராஜன், 735, காக்கா தோப்பு தெரு, மதுரை என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

1. அந்நிய தேச ஆட்சியானது ஒரு தேசத்து ஜனங்களைச் சுதந்தரமுடையவர்களாக ஒரு காரியத்தையும் செய்ய இடங் கொடுப்பது கிடையாது:— அரவிந்த கோஷ்.

* *

2. ஜனங்கள் தங்களுடைய கஷ்டங்களை நீக்கிக்கொள்வதற்குச் சாத்வீக எதிர்ப்பை அனுஷ்டிக்க முயன்றால் இப்போது அவர்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள்யாவும் நீங்கிவிடும்:— மகாத்மா காந்தி.

* *

3. ஏ வீரா! தைரியமாயிரு; இந்தியனாகப் பிறந்தோமென்று பெருமை யடைவாயாக; "நான் இந்தியன்; ஒவ்வொரு இந்தியனும் எனது சகோதரன்" என்று பெருமையாய்ச் சொல்லிப் பிரசங்கம் செய்; மேலும் படிக்காத இந்தியனும், ஏழை இந்தியனும், பிராமண இந்தியனும், பறைய இந்தியனும் எனது சகோதரன் என்று எல்லா ஜனங்களும் அறியுமாறு கூக்குரலிடு:— சுவாமி விவேகாநந்தர்.

"தாங்கள்"

நோயற்றவாழ்வுடன்

சுக ஜீவியாய் ஜீவித்திருக்கவும், ஆயுள் விருத்தியையும் சந்தான சந்ததிகளையும் பெருக உண்டாகச் செய்யக்கூடிய

புத்தகம்,

தங்களுக்கு வேண்டுமானால் அரை அணாஸ்டாம்பு அனுப்பினால் இனாமாகவே அனுப்பிவைப்போம்.

ஹக்கீம் S. P. M.

அப்துல்கனிராவுத்தர்,

வலங்கைமான்,

தஞ்சை ஜில்லா

நோட்டீஸ்.

தஞ்சாவூர் கோட்டை தெற்கலங்கம் தெருவில் காரைக்குடியிலிருந்து வந்து லேவாதேவி கடை வைத்திருக்கும், மெ. சு. பழனியப்ப செட்டியாகிய யென்னால் ஷெ கடைக்கு பவர் யேஜண்டாக ஷெ தஞ்சாவூர் கோட்டை வெளி கீழவாசல் பெரிய் அரிசிகாரத் தெருவிலிருக்கும் அளகப்பிள்ளை குமாரர் சாம்பசிவம்பிள்ளைக்கு 10-12-19 தில் கொடுக்கப்பட்டிருந்த ஜெனரல் யேஜண்டு பவர் ஆப் அட்டாணியை 12-8-20 தில், கியான்சல் செய்துவிட்டேன். ஷெ 12-8-20 முதல் ஷெ சாம்பசிவம்பிள்ளை யென்னுடைய பவர்ஏஜண்டும் அல்ல. மேற்படி கடை சம்பந்தமான ஏஜெண்டுமல்ல. இது சங்கதியை இதன்மூலமாகசகலருக்கும் தெரிவிக்கலானேன். இதோடு ஷெ சாம்பசிவம் பிள்ளைக்கு ஷெ கடை நடவடிக்கை விஷயமாய் யென்னுடைய தம்பி மெ. சு. சுப்பிரமணியஞ்செட்டியால்10-12-19ல்கொடுக்கப்பட்டிருந்த ஜெனரல் யேஜண்டு பவர் ஆப் அடடாணியையும் 20-8-20 ல் கியான்சல் பண்ணி நிறுத்திவிட்டபடியால் ஷெ 20-8-20 முதல் ஷெ சுப்பிரமணியஞ் செட்டிக்கும் மேற்படி கடைக்கும் ஷெ சாம்பசிவம் பிள்ளை பவர் யேஜண்டல்ல வென்பதையும் இதன் முலம் சகலருக்கும் தெரிவிக்கலானேன்.

தஞ்சாவூர் } மே. சு. பழணியப்ப
22—8—20. } செட்டி,

பல கண்காக்ஷிகளில் மேடல்கள்பெற்ற
அபூர்வ ஔஷதங்கள்.

பி. சுப்பராய் ஆயுர்வேத ஔஷதசாலை.

ஸ்ரீ வேங்கடேசபெருமாள் கோவில்
சன்னதி, தஞ்சாவூர்.

1. தாதுபுஷ்டி மருந்து:—இதன் குணத்தை எழுதிமுடியாது. அனுபோகத்தால் தெரிந்துகொள்ளலாம்: தாதுநஷ்டம், பலஹீனம், பசியின்மை, கண், கால் எரிவு, தேகவாக்ஷி, கை கால் இடுப்பு முதலிய அவயவங்களில் சோர்வு, வலி, சோம்பல், மேகச்சூடு, பாண்டு, சோகை, மேகவெள்ளை, வெட்டை, நீரழிவு, மதுமேகம், சதையடைப்பு, இன்னும் பற்பல மூத்திர ரோகங்களையும்போகும். சரீரபுஷ்டி, புருஷத்தன்மை, ஜீரணசக்தி, அபிரிமிதமான தாதுவிருத்தியையும் யுண்டாகும். நீத்திருக்கும் இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தி போகசக்தியை அதிகரிக்கும். டப்பா 1-க்கு விலை ரூபா 2, வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

2. அக்கினி மாந்தத்திற்கு மருந்து:—பசியின்மை, புளித்த ஏப்பம், நெஞ்செரிச்சல், மலச்சிக்கல், வயிற்றுவலி, வாய் நாற்றம், அஜீரணம், வயிற்றுப்பிசம், நித்திரையில்லாமை, பித்த உபத்திரவங்களை சொஸ்தப்படுத்தும். பசி தீபனமும், தேக ஆரோக்கியமும் த்ரும். டப்பா 1-க்கு அணா 8, வி. பி. சிலவு 1 அல்லது 2 டப்பாக்கள் வரையில அணா 5 பிரத்தியேகம்.

3. பிரமேக நிவாரணி:—எந்த காரணத்தினால் உண்டாயிருக்கும் மேகவெள்ளை, வெட்டை, நீர்குற்றல், நீர் தாரை எரிவு, சீழ் ரத்தம் வடிதல், முதலிய வியாதிகளையும் ஆண், பெண் இருதாரர்களுக்கும் சொஸ்தப்படுத்தும். சீசா 1-க்கு விலை ரூபா 1, வி, பி. சிலவு ஒன்று முதல் 6 சீசாக்கள் வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

நமது நேயர்களுக்கு.

நமது நேயர்கள் தங்களது சந்தாத்தொகைகளைக் காலதாமதமன்னியில் அனுப்பித்தரும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். (ப-ர்.)

ஸமரஸபோதினி, தஞ்சாவூர்.

1,000 ரூபா இனம்.

உலகப்பிரசித்திபெற்ற சாலா மிசிரி முறப்பா.

கவர்ன்மேண்ட் ரிஜிஸ்டர் ஆயிருக்கிறது.

இப்பண்டிதர் சென்ற 6-வருஷ காலமாகப் பாடுபட்டுக்கொண்டு வருகிறார்.



தினந்தோறும் ஆப்பிரிக்கா, பர்மா, சிலோன், பனங், சிங்கப்பூர், இரங்கூன், கல்கத்தா, பம்பாய், ஐதராபாத், மதராஸ் முதலியஇடங்களிலிருந்து அநேகமாய் ஆர்டர்கள்வந்துகொண்டிருக்கின்றன. மேற்கண்ட முறப்பாவை உபயோகித்து குணமடைந்த சங்கதிகளுக்கும் அதன் பரிநாமத்தைப்பற்றியும் அநேக சர்டிபிகேட்டுகள் அனுப்பிக்கொண்டு வருகிறார்கள். எமக்கு கிடைத்திருக்கிற சர்டி பி கேட் டை பார்க்கவேண்டுமென்று விரும்புகிறவர்கள் தபால் மூலமாய் தெரிவித்தால் பிரியமாக அனுப்புகிறோம். சாலமிசிரி முறப்பா சாலமிசிரியால்செய்யப்படவில்லையென்றும், அல்லது சர்டிபிகேட்டைப் பொய்யென்றும் ரூபிக்கிறவர்களுக்கு 1000 ரூபாய் இனம் கொடுக்கப்படும். அம்மாதிரியாக ரூபித்து மேற்கண்ட ரூபாயைக் கொடாதிருக்கும் பட்சத்தில் கோர்ட்டு மூலமாய் வசூல் செய்து கொள்ளலாம். இதுமனிதர்களுக்குப் பால்ய சேஷ்டைகளினாலும், துர் சகவாசங்களினாலும் ஏற்படக்கூடிய தாது நஷ்டத்தைக் கண்டிக்கப்பட்ட ஒருவித ஜீவரத்தினம்போலிருக்கின்றது. சாலாமிசிரி முறப்பா, அநேக விலையுயர்ந்த பதார்த்தங்களினாலும், அநேகவன மூலிகைகளாலும் தயார் செய்யப்பட்டிருக்கின்றது இதில் மதவிரோதமான எவ்வித பதார்த்தங்களும் சேர்க்கப்படவில்லை. யாவரும் சாப்பிடலாம். வெள்ளி பஸ்பம், தாம்பிரபஸ்பம், தங்கபஸ்பம் எவ்வித பஸ்பங்களும் இதற்குமுன் நிற்காது. ஒருதரம வரவழைத்து பரீட்சித்துப் பார்த்தால் பின் தங்களுக்குகே தெரியவரும். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற பழமொழிபோல் தேகத்தைக் காப்பாற்றிக்கொள்வது எல்லாருடைய கடமையாயிருக்கிறது. கிரயம் டம்பி 1-க்கு ரூ. 2—0—0. போஸ்டேஜ் டப்பி 1-க்கு அணா 8. 2 அல்லது 3 டப்பிக்கு அணா 12. ஆர்டர்கள் கொடுக்கப்பவர்கள் தங்கள் விலாசங்களை விபரமாகவும் தெளிவாகவும் எழுதவேண்டியது.

எங்கள் முறப்பாவை வாங்கப்பட்டவர்கள் டப்பியின்மேல் ரிஜிஸ்டராயிக்கப்பட்ட டிரேட் மார்க்கைப் பார்த்தும் அடியிற்கண்ட விலாசம் சரியாக இருக்கப்பட்டதைப் பார்த்தும் வாங்குகள். இல்லாவிடில் மோசம் போவீர்கள். ஒரு தடவை உபயோகித்தால் பூரணகுணமாகும் இரண்டு, மூன்று டப்பிகளை உபயோகித்தால் மாணகாலபரியந்தம் எவ்விதமான வியாதியும் அணுகாது. நமக்கு ஏஜண்டுகள் தேவையாயிருக்கிறது. இஷ்டமிருக்கும் பட்சத்தில் எங்கள் ரூல் சட்டத்தைக் தருவித்துப் பாருங்கள்,

டி. மன்னுலால், டில்லிவைத்தியர், சாலாமிசிரி முறப்பா டிபோ, பெங்களூர் சிடி

தேவை.

சந்தாதாரர்களைச் சேர்க்கவும் விளம்பரங்களைச் சேகரிக்கவும் ஏஜண்டுகள் தேவை. தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

மானேஜர்,
ஸமரஸ போதினி ஆபீஸ்,
தஞ்சாவூர்.

சந்தாதாரர்களே!

சுமார் இரண்டு வருடகாலமாகத் தமிழ் நாவலர் அ. மா. மாதவராய முதலியாரால் நடத்தப்பட்டு சன்மார்க்கபோதனை, பழமொழிகள், நாவல்கள், விகடங்கள், இவற்றுடன் வெளிவரும் குணபோதினி என்றமாதப்பத்திரிகையைஆயிரக்கணக்கான ஜனங்கள் வாசிக்கின்றனர். நீங்களும வாசியுங்கள்,

வருடசந்தா ரூபா 1—8—0.

குணபோதினி ஆபீஸ், பெங்களூர். (ச)

மஹத்வமுள்ள மஹானால் கிடைத்த

"அருமையான மூலிகையும் தாயத்தும்"

குஷ்டம், க்ஷயம், மூலம், கிறுணி, பிரம்மை, பைத்தியம், இழுப்பு, வலிப்பு, மூத்திர வியாதி முதல் நாள்பட்ட எந்த விதமான வியாதிகளும் பலவித கவலைகளும் கஷ்டங்களும் உடனே நீங்கும். புத்திரபாக்கியம் உண்டாகும். வேண்டியவர்கள் பதிலுக்கு (ஸ்டாம்பு) வைத்து அனுப்பவும். அடுத்த தபாலில் சகல விபரமும் கிடைக்கும். எந்த தேசத்து (ஸ்டாம்பும்) அனுப்பலாம்.

எஸ். ஏ. கே. பிள்ளை,
மேட்டுப்பாளையம், கோயமுத்தூர் ஜில்லா, சவுத் இந்தியா.

நேர்த்தியான பிரின்டிங்

ஜி. எஸ். மணியா அண்டு கோ., தஞ்சாவூர்.

இவ்வச்சி யந்திரசாலையை மிஸ்டர் கோபால சாமிஐயரிடமிருந்து வாங்கி இப்போது மிஸ்டர் டி. எஸ். கிருஷ்ணராவ் வெகு நன்ருகவும் திறமையாகவும் நடத்திவருகிருர். இந்த அச்சியந்திர சாலையில் தமிழ் இங்கிலீஷ் புஸ்தகங்கள், நோட்டீசுகள் விஸிடிங்கார்டுகள், கோர்ட் பெடிஷன்கள் மற்ற மனுபாரங்கள் சுத்தமாகவும் நேர்த்தியாவும் அச்சடித்துக் குறைந்தசார்ஜுக்கு வேலை செய்து கொடுக்கப்படும்,முனிஸிபாலிடியார்களும் ஜில்லா போர்டார்களும், இந்த அச்சுக்கூடத்தின் நேர்த்தியான பிரின்டிங்கைக் கவனித்து இதில் அச்சுவேலை கொடுத்து வருகிருர்கள். குறித்த காலத்தில் வேலை செய்து கொடுக்கப்படும்.

தயாராய் விட்டது.

ஊருகாய் தினுசுகளும் சட்டினிகளும் கைதேர்ந்த பிராமணர்களைக்கொண்டு செய்விக்கப் பட்டன.

கடுகுமாங்காய் 1 சேர் டின் விலை ரூ.	1	0	0
எலுமிச்சம்பழம் ,,	1	0	0
இஞ்சி ஊருகாய் ,,	0	10	0
கடாரங்காய் ,,	1	0	0
மாவடாம் 100-க்கு ,,	1	4	0
அசல் பாதம் அல்வா ,,	2	0	0
அப்பளம் 100-க்கு ,,	1	0	0
ரசம்பவுடர் ¼ படி டின்	1	0	0
சாம்பார்பவுடர் ¼ படி டின்	1	0	0
பருப்புப்பொடி ¼ படி டின்	1	0	0

3 ரூபாய்க்கு ஆர்டர் செய்கிறவர்கள் ஒரு ரூபா முன்பணம் அட்வான்ஸாக அனுப்பவும். பினங்கு சிங்கப்பூருக்கு ஏஜண்டுகள் தேவை.

THE INDIAN PICKLES CONDIMENT MANUFACTURING Co., Madras.

T. B. Jayasunker Davey
இயற்றிய
ரத்னப் பிரகாசம்.

நவரத்தினங்களின் குணங்கள், தோஷங்கள், பரீக்ஷை, நல்ல ரத்தினங்களை அணிவதனுல் உண்டாகும் நன்மைகள் இவைகளைப்பற்றி கூறும் அபூர்வ நூல்.

விலை அணு 8.

Apply to:—
R. B. தவே அண்டு சன்ஸ்,
தஞ்சாவூர்.

கனகாம்புஜம் 2-8-0.

	ரூ.	அ.		ரூ.	அ.
அம்புஜாக்ஷி	1	12	நாகரிகம்	2	0
விஜயசுந்தரம்	2	0	ஆனந்தமடம்	1	0
அஞ்சனுக்ஷி	2	4	தர்மாம்பாள்	1	2
பாலாமணி	2	0	வஜ்ரலேகை	0	12
அயாஷா	1	12	விஜயபாஸ்கரன்	1	0
ஞானும்பிகை	1	8	ஜெயலக்ஷ்மி	0	10
மேனகா	1	8	மாயாசுந்தரி	0	8
வஸந்தமல்லிகா	1	0	ஸீதாலக்ஷ்மி	1	0
கோகிலாம்பாள்	0	12	சிவஞானம்	1	4
மங்கையர்க்கரசி	0	12			

எங்களிடம் எல்லாத் தமிழ் நாவல்களும், இன்னும் மற்ற புஸ்தகங்களும் கிடைக்கும். கேட்லாகுக்கு எழுதுங்கள்.

சாரி அண்டு கம்பெனி,
தபாற் பெட்டி நெ. 281, மதராஸ்.

என்னை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?

நான் ஸ்திரீ புருஷர்களின் உயிரைக்காக்கும் கைவல்ய நவநீதம், வாழ்க்கையின் சுகம், காதற்பெருக்கு, பரவச முதிர்ச்சி முதலானதுகளை ஊட்டுகிறவன்.

,, ஸ்திரீ புருஷ லக்ஷணங்களையும், சரீர கோட்பாடுகளையும் விவரித்துக் கூறுபவன்.

அதனுல்தான்

சகலதேச வாலிபர்களும், ஸ்திரீகளும், புருஷர்களும் என்னை விரும்புகிருர்கள்,

நான் தான்

ஆநந்தமகிளா.

படங்களுடன் கூடியவன் விலை ரூ 1-0-0

சொற்ப பிரதிகளே கைவசமுள. தாமதிக்காமல் இன்றே எழுதுங்கள்.

விலாஸம்:—

பி. எஸ், ராய், புதுவை.

பெரிய கம்பெனி! நாணயமான சரக்குகள் !!

திருப்தியில்லாத சரக்குகள் திரும்பப் பெற்றுச் சுத்தமான பட்டு, சகாய விலை, புதுமாதிரியான பட்டுப்புடவைகள், ரவிக்கைகள், சால்வைகள், வெண்பட்டு வேஷ்டிகள், தாவணிகள், மலைபாளத்து முண்டுகள் முதலிய எல்லாப்பட்டு தினுசுகளும் கிடைக்கும். எந்தப் புதுமாதிரியும் நெய்து அனுப்பலாம்.

புடவைகள் 20 முதல் 250 ரூபா வரை கிடைக்கும். ரவிக்கைகள் 3 முதல் 15 ரூபா வரையில் கிடைக்கும். வெண்பட்டு வேஷ்டிகள் 10×6 ஜோடி 20 முதல் 35 ரூபா வரையும் 9×6 ஜோடி 1-க்கு 18 முதல் 30 ரூபா வரை.

மற்றும் எல்லா விபரங்களுக்கும் கேட்லாக் தருவித்துப்பார்த்துக்கொள்ளவும்

கேட்லாக் இனும் !

Manager.
Silk Pitamber Co.,
Dharanagar Street,
BENARES CITY.

விலாசம்:—
மானேஜர்,
பட்டு பீதாம்பர கம்பெனி,
காசி.

பெட்டியில் வைத்துப் பூட்டுங்கள்.



உங்கள் நகைகளையும் விலையுயர்ந்த சாமான்களையும் இந்த லட்சுமி டிரங்குப் பெட்டியில் வைத்துப் பூட்டுங்கள். எங்களுடைய தொழிற்சாலைகளில் தகுந்த வேலைக்காரர்களைக் கொண்டு எஃகுத் தகடுகளினுல் டிரங்குப் பெட்டிகள் செய்யப் படுகின்றன. கண்ணனூர் கொச்சி மைசூர், விசாகப்பட்டணம், கும்பகோணம் முதலியவிடங்களில் நடந்த தொழிற்பொருட் காட்சி சாலைகளில் தங்கப்பதக்கப் பரிசும் வெள்ளிப் பதக்கப் பரிசும் பெற்றிருக்கின்றன நமது தொழிற்சாலையில் செய்யப்படும் டிரங்குகளின் வேலைப்பாட்டையும் அழுத்தத்தையும் பற்றி யாவரும் மெச்சிப் பேசியிருக்கிருர். ஆர்டர்கள் கொடுத்தாலும் செய்து தருகிறோம். ஒரு முறை ஆர்டர் செய்து பாருங்கள்.

(கேட்லாக்ருக்கு எழுதுங்கள்)

நாகப்பட்டணம் சுதேசி ஸ்டீல் டிரங்கு கம்பெனி, Estd. 1906.
தஞ்சாவூர்.

Printed at the Vartakamitran Press and published by E. Suryanarayana Aiyar B. A., B. L., at 2109 Yellaiamman koil Street, Tanjore.